Registered as a NewsPaper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 21 (03 - 04 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை: 45

## க.பொ.த.(உ/த) பரீட்சை வினாத்தாளில் தவறு

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப் படும் க. பொ. த. உ/த) விசேட பரீட்சை வினாத் தாளில் தவறு இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நேற்று மூன்தினம் நடைபெற்ற பொருளியல் பகுதி ஒன்றில் ஏழாவது வினாவில் ''ஆ'' பிரிவில் தரப்பட்ட தேசிய வருமானக் கணக்கிலேயே இத்தவறு இடம்பெற்றுள்ளது. இக் கணக்கில் வெளிநாட்டுக் கொடைகளும் கைமாற்றல் சம்பாத்தியமும் (8 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில்விமானக்குண்டுவீச்சு

# 53 மணிநேர ஊரடங்கு பிரகடனம்

## இராணுவ படை எடுப்பு இடம்பெறலாம்?

வவுனியா கிராமங்கள்மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் கடந்த சிலநாட்களாக குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தி வருகின்றன. அத்தோடு, இராணுவ முகாம்களில் இருந்து எறிகணைத் தாக்குதலும் இரவு பகல் வேறுபாடு இன்றி நடைபெற்ற வண்ணமுள்ளது. இதேவேளை 53 மணிநேர ஊரடங்கும் சிறிலங்கா அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையால் வவுனியாவில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்று இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த சில நாட்களாகச் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான மாச்செட்டி விமானங்களும், வை-12 விமானமும் வவுனியா வடக்கில் உள்ள தமிழ்க் கிராமங்கள் மீது தொடர்ச்சியான குண்டு வீச்சை நடத்தி வருகின்றன. ஓமந்தையைச் சூழவுள்ள கிராமங்களை இலக்காகக்கொண்டு நடத்தப்படும் இத்தாக்குதல்களினால் பல குடியிருப்புக்கள் சேதமடைந்ததாகத் தெரிய வருகிறது.

அத்தோடு வவுனியா நகரில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து தொடர்ச்சியாக அண்மையில் உள்ள தமிழ்க் கிராமங்கள் மீது எறிகணைத்தாக்குதலும் இரவு பகல் வேறுபாடின்றி நடத்தப்பட்டுவருகின்றது. மேலும் காவலரண்களில் இருந்து துப்பாக்கிப்பிரயோகமும் தொடர்ச்சியாகச் செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் 'இராணுவக் கட்டுப்பாட்டில்' இல்லாத பகுதிகளில் இன்று அதிகாலை ஒரு மணிக்கு அமுலுக்கு வந்துள்ள ஊரடங்குச்சட்டம் நாளை மறுதினம் காலை ஆறு மணி வரை அமுலில் இருக்குமென கூட்டுப்படை தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து வவுனியா மாவட்டத்தில் பெரும் இராணுவப் படையெடுப்பு ஒன்று இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## வவுனியா - யாழ்ப்பாண போக்குவரத்துப் பாதிப்பு

(வவுனியா)

வட பகுதியில் இருந்து வவுனியா நகரப் பகுதி நோக்கிச் செல்லும் பயணிகளின் தொகை மிக குறைந்துள்ளது.

இராணுவத்தின் கண்மூடித்தனமான துப்பாக்கி மற்றும் ஷெல் பிரயோகங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளும் எண்ணத்துடனேயே பயணிகள் இப்போக்குவரத்தைக் குறைந்துள்ளனர் எனத் தெரியவருகிறது. (தி)

### வவுனியா நகரப்பகுதி

## அகதி முகாம்களிலிருந்து மக்கள் வெளியேற்றம்

(வவுனியா)

வவுனியாவில்உள்ள அகதிகள் பராமரிப்பு நிலையத்திலிருந்து பல அகதிகள் வெளியேறிய வண்ணம் உள்ளனர்.

வவுனியா - யாழ். வீதியில் உள்ள விவசாயப் பாடசாலைக் கட்டடத்தில் இந்த நிலையம் செயல்படுகிறது.

இங்கு போதிய வசதி இல்லாமையாலும் இராணுவம் மற்றும் சிங்களக் குண்டர்களின் அச்சுறுத்தலினாலும் அகதிகள் வெளியேறுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்திலிருந்து வரும் அகதிகள் உடனடிப் பராமரிப்பிற்காக இந்தக் கட்டடத்தில் தங்கவைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (தி)

## கிழக்கில் புலிகள் தாக்கு ராணுவத்துக்குஅதிகஇழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் ரோந்து சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் மீது கடந்த செவ்வாயன்று விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்த தாக்குதலின் போது இராணுவ தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை நேற்று முன் [8 ஆம் பக்கம் பார்க்க]

## பல்கலை. வாகனம் மீது முஸ்லிம் காடையர் தாக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் ஊழியர்களை ஏற்றிச் செல்லும் வான்ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை காலை ஏறாவூரில் வைத்து முஸ்லிம் காடையர்களால் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

சம்பவம் நடந்ததினம் வழக்கம்போல இந்த வான் பல்க [8 ஆம் பக்கம் பார்க்க]

### யாழ். நகரப்பகுதியில்

## போக்குவரத்துக்களை இலகுவாக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதிகளில் வீதிப் போக்குவரத்துக்களை இலகுவாக்கிக் கொள்வதற்கும், வாகன நெரிசலைத் தவிர்த்துக் கொள்வதற்கும் புதிய நடைமுறைத் திட்டம் ஒன்றை யாழ் மாநகரசபை நடைமுறைப்படுத்திவருகிறது

இத் திட்டத்தின் கீழ் நகரத்தின் பழுதடைந்த நிலையில் (8 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவை குழு பலாலி சென்றது

### -கைதிகளைப் பார்வையிடும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். குழுவினர் திட்டமிட்டபடி நேற்று சிறிலங்கா இராணுவத்தினரால் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிட சென்றனர்.

மேலும் சர்வதேச செஞ்சிலுவைப் பிரதிநிதிகளான தலைவர் ஜீன் பொன்சுவாஸ், தேடுதல் சேவைப் பிரிவு அதிகாரி மரிஜோ, மற்றும் அண்மையில் வந்துள்ள சர்வதேச செஞ்சிலுவை அதிகாரி ஆகியோரும் இதில் அடங்குவார்கள் இந்த [8 ஆம் பக்கம் பார்க்க]

## தொண்டர் ஆசிரி. நியமனம்; கொழும்பிற்கு விசேட குழு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர நியமனமாக்குவதற்கான ஏற்பாடுகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக விசேட தூதுக்குழு ஒன்று கொழும்பு செல்ல இருக்கிறது.

கொழும்பு செல்ல இருக்கும் இத் தூதுக் குழுவினர் மத்திய கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுடனும், கல்விச் சேவைகள் அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் கல்விச் சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை [7 ஆம் பக்கம் பார்க்க]

## தியாகச்சுடர் அன்னைபூபதி நினைவு நிகழ்ச்சிகள்

தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவாக அடையாள உண்ணா விரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று கரவெட்டி வட்டவைப் பிரிவில் அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது,

அடையாள உண்ணாவிரதம் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.00மணிவரை நடைபெறும்.

நினைவஞ்சலிக்கூட்டம் பிற்பகல் 7.00 மணிக்கு ஆரம்பமாகும். இதில் பைந்தமிழன், பூங்கோதை, தமிழன்பன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்துபல நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## திருமலை ராணுவ நடவடிக்கை புலிகளால் முறியடிப்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டில் சிறிலங்கா இராணுவத்தினரால் ஆறு தினங்களாக மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கை விடுதலைப்புலிகளின் தாக்குதல்களால் படுதோல்வியடைந்தது

வெருகல் முருகன் கோவில் இராணுவ முகாமிலிருந்தும் குப்பிறுப்பிட்டி இராணுவ முகாமிலிருந்தும்கனரகஆயுதங்கள் சகிதம் காட்டுப்பகுதிகளுக்குள் செல்லும் நோக்கத்துடன் பல இராணுவ அணிகள் வெளியேறி வந்தன.

இந்த அணிகள் காட்டுப்பகுதியின் எல்லைகளில் வைத்து விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதல்களுக்கு உள்ளாகினர். கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமான இந்த இராணுவ நடவடிக்கையின்போது சிறிலங்கா இராணுவத்தினர் தரப்பில் பலத்த இழப்புஏற்பட்டுள்ளது.

வெருகல் முருகன் கோவில் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிவந்த இராணுவத்தினர் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் ஏழு கண்ணிவெடித் தாக்குதல்களு (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பரேசன் 'சிக்சரில்' இரு தினங்களில் மாற்றம்

(கொழும்பு)

புலிகளுக்கு எதிராக தற்போது முல்லைத்தீவுப் பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒப்பரேசன் சிக்சர் நடவடிக்கையில் இன்னும் ஓரிரு தினங்களில் மாற்றம் மேற்கொள்ளப்படுமென இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

எனினும் இம் மாற்றம் குறித்து விபரிக்க மறுத்த அப் பேச்சாளர் இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்று தெரிவித்தார்.

## இராணுவ சுற்றிவளைப்பில் சம்பூரில் மாணவன் கைது

மூதூர் பகுதியிலுள்ள சம்பூரில் கடந்த செவ்வாயன்று மேற் கொள்ளப்பட்ட இராணுவ சுற்றிவளைப்பில் சித்திரவேல் மோகனேஸ்வரன் (வயது 21) என்னும் மாணவன் சிறிலங்கா இராணுவத்தால் பிடிக்கப்பட்டு முகாம் கொண்டுசெல்லப்பட்டுள்ளார்

இப் பகுதியில் அடிக்கடி இராணுவசுற்றிவளைப்புகளும் கைதுகளும் இடம் பெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

COMMERCIAL BANK

## வளமான சேமிப்பிற்கு வடக்கில் ஓர் புதிய பாதை

# உங்கள் வங்கி வழங்கும்

வர்த்தக வங்கி சேமிப்புச் சான்றிதழ்கள்
COMBANK SAVINGS CERTIFICATES

வர்த்தக வங்கி சேமிப்புச் சான்றிதழ் உறுதிசெய்வது:

★ வைப்பிலிடும் போதே வளமான வட்டி
★ கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்
★ வட்டி மீதான பிடிப்புவரி விலக்கு (NO WITHHOLDING TAX)
★ முத்திரைத் தீர்வு விலக்கு (NO STAMP DUTY)
★ கடன் பெற இலகுவான பிணை உறுதி
★ நியமிக்கும் மறு உரித்தாளரிற்கு பணம்

மக்கள் சேவையில் முதன்மையான உங்கள் வங்கி
வெகு விரைவில் வழங்கும்

## புத்தாண்டுப் பரிசுத் திட்டம்

நாடு பூராவும் உள்ள எமது கிளைகளில் ரூபா 500/- ரூபா 1000/- ரூபா 5000/- ரூபா 10000/. ஆகிய பெறுமதிகளில் 6, 12, 24 மாத காலங்களில் முதிர்வடையும் சான்றிதழ்களைப் பெறலாம்.

சான்றிதழுக்கான அட்டவணை-:

| நீங்கள் கொடுப்பது | | | நீங்கள் பெறுவது |
|---|---|---|---|
| 6 மாதங்கள் | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | முதிர்ச்சியின் போது |
| 14.5%ல் | 15.5 ல் | 16.5ல் | |
| ரூபா 465/- | 433/- | 375/- | ரூ. 500/- |
| ரூபா 932/- | 866/- | 750/- | ரூ. 1000/- |
| ரூபா 4662/- | 4330/- | 3760/- | ரூ. 5000/- |
| ரூபா 9325/- | 8659/- | 7519/- | ரூ 10,000/- |

எம்மை நாடுங்கள், சேமியுங்கள், வளருங்கள்!

# வர்த்தக வங்கி

474, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் வெற்றி எங்கள் பலம்

தலைமையலுவலகம்:

"கமார்ஷியல் இல்லம்"
21 பிறிஸ்டல் வீதி,
கொழும்பு - 1.

எமது ஏனைய கிளைகள்:

வெளிநாட்டுக்கிளை (கொழும்பு), நகரக்கிளை (கோட்டை), புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, நாரஹென்பிட்டி, பொரளை, நுகேகொடை, மரகம, கட்டுநாயக்கா (FTZ), நீர்கொழும்பு, வென்னப்புவ, கண்டி, மாத்தளை, கேகாலை, கலேவெல, குருநாகல், ஹிங்குராக்கொடை, ஹிக்கடுவ, காலி, மாத்தறை.

(சி-4114)


## வரி விளம்பரம்

### சோதிடம்

சனி வியாழ இராகு கேது மாற்றத்தினால் மகாதெசை புத்தியினால் உங்கள் எதிர் காலப்பலாபலன்கள் அறிய வேலணை சோதிடர் V A. சிவராசா 152B அரசடி றோட் கந்தர்மடம்.

(2405)

### பெற்றுக் கொள்ளவும்

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரை) மேற்படி சங்கத்தில் தேங்கியிருக்கும் பங்குச் சான்றிதழ்களை உரியவர்கள் அடையாளம் காட்டி உடனடியாகப் பெற்றுக் கொள்க. பெறப்படாதவற்றின் பாதுகாப்புக்கு சங்கம்பொறுப்பாகமாட்டாது. 420- ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

(2407)

### விண்வெளியில்

தொடர்ந்து ஒன்பது மாதங்கள் விண்வெளியிலேயே இருந்ததால், மனரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தார் க்ரிகலேவ். இப்போது உடல் ரீதியாகவும் மோசமான நிலைக்குப் போய் விட்டார்!

''அவரை உடனடியாக பூமிக்குக் கொண்டுவந்து சிகிச்சை தரவேண்டியது மிக அவசியம்'' என்று பல ரஷ்ய டாக்டர்கள் பதற்றத்தோடு கருத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பூமியில் நடக்கும் இந்தக் குழப்பம் பற்றியெல்லாம் எதுவும் தெரியாமல் 'ஏன் தன்னை யாரும் வந்து கூட்டிச்செல்லவில்லை'' என்று யோசித்தபடி ஜுசுரவேகத்தில் பூமியைச் சுற்றிக் கொண்டே இருக்கிறார் க்ரிகலேவ்.

நன்றி: ஜூனியர் விகடன்

---

வடமாகாண

தெ.ப.பொ.கூ.சங்கங்களின் சமாசத்தின்

## அறிவித்தல்

அன்னை பூபதியின் 4ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 04-04-1992 சனிக்கிழமை சகல அங்கத்துவ சங்கங்களும் கீழ்வருமாறு செயல்பட்டு உதவவும்.

1. தலைமை அலுவலகங்களைப் பூட்டி, அங்கத்தவர் பணியாளர்கள் உரிய இடங்களில் உண்ணாவிரதத்தில் கலந்து சிறப்பித்தல்.
2. உண்ணாவிரதம் நடைபெறும் இடத்திற்கு அண்மையில் உள்ள கிளைகளில் விற்பனைகளை தடை செய்யவும்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ.ப.பொ.கூ.ச.சமாசம்,
யாழ்ப்பாணம்.

( /4211)

---

## நினைவு கூருகின்றோம்...

### 1992. 04. 03

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு, கொடுவாமடுப்பகுதியில் சிறிலங்காப் படையினரால் எகதாகிக் கொண்டு செல்லப்படும் வழியில் ஈரோஸ் அமைப்பின் குண்டு வெடிப்பில் சிக்கியதில் வீரச்சாவெய்திய-

**தவராசா** (சி. தவராசா-புல்லுமலை, மட்டக்களப்பு)

இவருடன் வீரச்சாவெய்திய மட்டக்களப்பு - புல்லுமலையைச் சேர்ந்த மற்றுமொரு மாவீரர்-

1988 ஆம் ஆண்டு இளவாலையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**முரளி**

1991 ஆம் ஆண்டு நானாட்டானில் அப்பகுதியை நோக்கி முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**2 ஆம் லெப். வசிட்டன்** (கதிரமலை நாகராசா -நானாட்டான், மன்னார்)

**2 ஆம் லெப். சந்தாம்பிள்ளை** (திருச்செல்வம் சகாயநாதன்- வாழ்க்கைப்பட்டான் கண்டல், மன்னார்)

**மகாலிங்கம்** (இராமையா புண்ணியமூர்த்தி- செட்டியார்கட்டை, அடம்பன்)

**புவிராஜ்** (யோ. ஜோண்சன் பெரியகட்டு, செட்டிகுளம், வவுனியா)

வவுனியா, பம்பைமடுப்பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**துரோணர்** (இலட்சுமணன் வினயகமூர்த்தி- இரணை இலுப்பைக்குளம், வவுனியா)

காரைநகரில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**கண்ணன்** (அரியரட்ணம் யூட்மேரிஜோர்ஜ் -கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(சி-4208)



கப்டன் சாரா

திருமலை நகரின் முழு இயற்கையின் தோற்றத்தையும் மிக எளிமையாகச் சிரமமின்றி இரசிப்பதற்குத் தேவையான ஓர் இடம் தான் அந்த உவர் மலைப் பிரதேசம். காரணம் இப்பிரதேசமானது சமமின்றி ஓர் உயர்வும் தாழ்வுமாக அமைந்த ஒரு மலைச்சாரல் பிரதேசமாகும். இவ்விடத்தின் மையப்பகுதியில் நின்று பார்த்தால் திருமலை நகரின் இயற்கையின் சிற்றமே தன்னால் வெளிவரும்.

திருகோணமலையிலேயே மிகவும் சிறப்பு வாய்ந்த திருக்கோணேஸ்வரம், அதைச் சூழவுள்ள பரந்த கடல், அக்கடலோடு அமைந்த சிறப்பு வாய்ந்த இயற்கைத் துறைமுகம், அத்துறைமுகத்தோடு அணைக்கப்பட்டிருக்கும் பல வர்ணநிற படகுகள், கடலின் பரப்பில் ஆங்காங்கே நிற்கும் பாரிய கப்பல்கள், கடலின் மத்தியில் தனக்கென ஒரு பெரிய இடம் பிடித்து நிற்கும் மாவாலை, மாலையானதும் மீன் பிடிப்பதற்காகச் செல்லும் எண்ணற்ற சிறு வள்ளங்கள். இரவானதும் மாவாலை, கடற்பரப்பையே பிடித்து நிற்கும் கப்பல்கள், வள்ளங்களில் வெளிச்சத்திற்காகக் கொளுத்தப்படும் சிறு விளக்குகள், இவை அனைத்திலும் இருந்து வரும் வர்ண வர்ண மின்னொளிகள், இவையெல்லாவற்றையுமே பார்த்து இரசித்துக் கொண்டிருக்கும்போது தன்னையே மறந்து நேரம் போவதே தெரியாது

இப்படிப்பட்ட இயற்கையின் தோற்றத்தையே எடுத்தவுடன் எடைபோட்டுவிட முடியாத ஓர் இடத்தில் எளிமையான ஒரு குடும்பத்தில் பிறந்தவன் தான் சாரா. குடும்பத்தில் இளையவனான இவனை இவனது வீட்டார் செல்லமாக ராஜா என அழைப்பார்கள்.

எந்நேரமும் சிரித்த முகத்துடனும், துடியாட்டமாகவும் இருக்கும் இவன் தி/உவர்மலை மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்ப படிப்பைத் தொடங்கி ஜி. சி. ஈ. சா/தரம்வரை அதே பாடசாலையிலேயே தனது படிப்பைத் தொடர்ந்து வந்தான். இவனது துடியாட்டங்களையும், குளப்படிகளையும் கூறப் பல சம்பவங்கள் உண்டு.

தனது வீட்டுக்குத் தெரியாமல் பாடசாலை நண்பர்களையும் அழைத்துக் கொண்டு கடலுக்குக் குளிக்கச் செல்வான். கடலில் குளித்துக் கொண்டிருக்கும்போது நீச்சல் தெரியாத மற்றைய நண்பர்களை ஆழமான இடத்திற்கு இழுத்துச் சென்று அவர்களுக்குப் பயமூட்டி அவர்களைக் கத்த வைப்பான்.

மற்றைய நண்பர்கள் குளித்து விட்டுக் கரையை அண்மித்தாலும் இவன்மட்டும் இலகுவில் கரைக்கு வரமாட்டான். கடலின் மத்தியில் இருக்கும் பாறையின் மேல் ஏறிப் பாய்வதும், குதிப்பதும், பல மைல் தூரம் நீந்துவதுமாகவே இருப்பான்.

படிப்பிலும் மிகவும் கெட்டிக்காரனான இவன், நீச்சல், உதைபந்தாட்டம், ஓட்டம் போன்றவற்றிலும் மிகவும் திறமைசாலி, பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நாட்களில் தான் பங்கு பற்றும் விளையாட்டுக்களில் எல்லாம் பல பரிசில்களைப் பெற்றவன்

இவனது குடும்பத்தில் உள்ள எல்லோரும் இசைக்கருவிகள் அனைத்தையும் இயக்குவதிலும், பாடுவதிலும் வல்லமை பெற்றவர்கள். இவனது தந்தையின் தலைமையில் திருமலையில் நடக்கும் நிகழ்ச்சிகளோ பல எனலாம். இவன் தனது தந்தையார் பாடும் ஈழத்துப் பாடல்களை மிகவும் விரும்பிக் கேட்பான்.

1989-ம் ஆண்டு இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கப்டன் சாரா ஆற்றிய பணிகள் பல. தனது பயிற்சிப் பாசறையின் போது அனைத்துப் போராளிகளினதும் நெஞ்சைக் கவர்ந்தவன் சாரா.

இதற்கிடையில் 1990-ம் ஆண்டு நடுப்பகுதியில் தோப்பூர் என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல் ஒன்றின்போது சாராவும் பங்குகொண்டான். அச்சண்டையில் மிகவும் திறமையான முறையில் சண்டை புரிந்து இராணுவத்தினரிடமிருந்து ரி. 56-2 ரகத் துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றினான் சாரா. இவனது திறமைக்குப் பொறுப்பாளர்கள் உட்பட அனைத்துப் போராளிகளினாலும் இவன் பல பாராட்டுக்களைப் பெற்றான். சாரா அன்று கைப்பற்றிய அதே துப்பாக்கியே அவனுக்குப் பொறுப்பாக இருந்த பொறுப்பாளரினால் சொந்தமாக வழங்கப்பட்டது. இச்சண்டையில் இவனது திறமையைக் கண்டுதான் இவனுக்கு 15 பேர் வழங்கப்பட்டு அக்குழுவிற்குத் தலைவனாகவும் நியமிக்கப்பட்டான். அன்று தான் கைப்பற்றிய ஆயுதத்தை அவனது உயிர் பிரியும் மட்டும் மற்றைய போராளிகளினது கை மாறாதபடி தன்னுடனேயே வைத்திருந்தான் சாரா.

இவன் தனது பயிற்சியை முடித்த காலம் தொடக்கம் இயக்கத்தின் தேவைகளில் மிக முக்கிய தேவையாகிய தொலைத் தொடர்பு சாதனத்தை (கதைக்கும்) இயக்கும் வேலையில் ஈடுபட்டான். தனக்கு என பொறுப்பாளரினால் வழங்கப்படும் வேலையை மிக நேர்த்தியாகவும் செம்மையாகவும் செய்து வருவான்.

திருமலையின் நகரப் பகுதியிலிருந்து இயக்கத்தின் தொடர்பை ஏற்படுத்தி இயக்கத்திற்குச் செல்வது என்பது மிகவும் கடினமான காரியம் ஆயினும் இவன் பல வழிகளிலும் முயற்சி செய்து சலிக்காது எப்படியோ ஓர் வழியில் தொடர்பை ஏற்படுத்தித் தன்னையும் இயக்கத்தில் இணைத்துக் கொண்டவன் சாரா.




இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினரின் காலத்தில் உணவுப் பொருள்களைப் பெறுவதற்காகப் பல மைல் தூரம் நடந்து தான் உணவுப் பொருள்களைப் பெற்று வர வேண்டும். அப்படியான வேளையிலும் கூட ''ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது'' என்ற வாசகத்தைப் போல தான் தூக்கிய பொருள்களுடன் பாட்டும் கூத்துடனும்தான் முகாம் வந்து சேருவான்.

1989-ம் ஆண்டு கடைசிப் பகுதியில் மூதூர் பிராந்தியத்திற்குச் சென்ற இவன் அங்கும் தொலைத் தொடர்பு இயக்குனராகவே இருந்தான். இச்சாதனத்தைப் பற்றிய தொழில் நுட்பத்தில் மிகவும் திறமையானவன் சாரா.

1991-ம் ஆண்டு ஆனையிறவு இராணுவ முகாம் முற்றுகையின் போது ஆனையிறவு இராணுவத்தினருக்கு உதவியாகக் கட்டைக்காடு, புல்லாவெளி போன்ற இடங்களால் முன்னேறிய இராணுவத்தினருடன் பல நாள் சண்டை மூண்டது இச்சண்டையில் இவன் ஒரு குழுவிற்குத் தலைவனாக இருந்தான். இப் பாலைவனப் போரின்போது இவன் தனது அணியை மிகவும் செம்மையாக வழிநடத்தி மிக முனைப்புடனும் சண்டையில் ஈடுபட்டு வந்தான்.

1991-08-03 அன்று பாரிய கவச வாகனங்கள் சகிதமும், ஆகாயப்படையினரின் உதவியுடனும் ஆனையிறவை நோக்கி முன்னேறிய பல பேர் கொண்ட இராணுவ அணியுடன் ஏற்பட்ட மோதலின் போது வீருடன் சண்டை செய்து கொண்டிருந்த சாராவின் உடலை எதிரியின் துப்பாக்கியிலிருந்து வெளிவந்த ரவைகள் சல்லடைபோட்டது இவனுடன் நின்ற மற்றைய போராளிகள் இவனைக் காப்பாற்றுவதற்காகக் கடைசி வரை முயன்றும் போராடியும் முடியவில்லை. இறுதியில் சாரா எம்மை விட்டுப் பிரிந்தான் சூரியனும் சந்திரனும் சுற்றிச் சுற்றி வருவது, ஒரு சாதாரண நிகழ்வே. ஆனால் எமது போராளிகள் பெறும் ஒவ்வொரு வெற்றியும் சாதனையும் தமிழீழ மலர்விற்கான ஒவ்வொரு ஏறுபடியாக அமைகின்றன. இந்த ஏறுபடியாக அமைபவர்கள் மறைந்த எம் மாவீரர்களே இவர்களே எமது தமிழீழத் தாய் நாட்டின் அசைக்க முடியாத தூண்கள் ஆகின்றனர்.

— ப. ஜெயந்தன்

---

மருத்துவம்

# டெங்கு காய்ச்சல்

## பரவுகின்ற முறையும் தடுக்கும் சில முறைகளும்

'டெங்கு காய்ச்சல்' உலர் வெப்பநிலை காலநிலை உப உலர்வெப்பநிலை பிரதேசங்களிலும் நாடுகளிலுமே குறிப்பாக கரையோரப் பகுதியிலேயே காணப்படுகிறது. அதாவது தென்கிழக்காசிய நாடுகளிலேயே பெருமளவில் காணப்படுகிறது. இதுவும் ஒரு நுளம்பு வகையினாலேயே பரவுகிறது. பரந்தளவில் இந்நோய் பரவும் ஆபத்துமிருக்கிறது ஒருமுறை 'டெங்கு காய்ச்சல்' ஏற்பட்டால் ஏறக்குறைய ஒன்பது மாதங்களுக்கு இக் காய்ச்சல் மீண்டும் ஏறபடாதவாறு உடலில் தற்பாதுகாப்பு ஏற்படுகிறது மீண்டும் இக் காய்ச்சல் ஏற்பட்டால் நிரந்தரமான தற்பாதுகாப்பு உடலில் ஏற்படும். டெங்கு காய்ச்சல் ஏற்பட்டால், ஏனைய பிகுறாப் வைரசுகளினால் ஏற்படும பஞ்சள் காய்ச்சல் (Yellow Fever) போன்றவற்றிற்கும் தற்காலிகமான தற்பாதுகாப்புஏற்படும்.

### டெங்கு காய்ச்சல் எப்படி ஏற்படுகிறது?

இது ஒருவித வைரசினாலேயே ஏற்படுகிறது இவ் வைரசு நுளம்பு மூலம் பரவுகிறது. வைரசு உடம்பிற்குள் புகுந்து 5-6 நாட்களின் பின்பே (Incubation Perori) காய்ச்சல் ஏற்படுகிறது காய்ச்சலுடன், தலையிடி, முதுகு உளைதல், உடம்பு முழுவதும் வலி ஏற்படுதல், கண்கள் இரண்டுமே சிவந்து வலி ஏற்படும். கண்ணீர் அதிகளவில் ஏற்படும். மேலும் பசி ஏற்படுவதுடன் வயிற்றைக் குமட்டும் வாந்தி ஏற்படும். மனச்சோர்வும் ஏற்படும் அதனைத் தொடர்ந்து மூக்கினுள்ளும் உணவுக் கால்வாயிலும் குருதிப்பெருக்கு ஏற்படும். தோலிலும் குருதிப்பெருக்கு ஏற்படும். உடலுக்குள்ளேயுள்ள சில சிறிய இரத்தக் குழாய்களில் குருதி உறைவு (Intavascular Coagulation) ஏற்படுவதால் உயிராபத்தும் ஏற்படலாம்.

தகுந்த சிகிச்சை உரியநேரத்தில் அளிக்கப்பட்டால் கூட 10 சதவீதமானவர்களுக்கு உயிராபத்து ஏற்படும் அபாயமிருக்கிறது.

### சிகிச்சை முறை

இவ் வைரசு, பாதிக்கப்பட்டவர்களின் இரத்தத்தில் காணப்படுவதால், இரத்தப் பரிசோதனை மூலம் கண்டறியலாம். இதற்குரிய அண்டிபொடி குருதியில் அதிகரித்துக் காணப்படும்.

இந்த டெங்கு காய்ச்சலுக்கென விசேட சிகிச்சை முறையோ மருந்து வகைகளோ இல்லை. காய்ச்சலின் குணஇயல்புகளை குறைப்பதற்கு மாத்திரமே மருந்துகள் கொடுக்கப்படும். அதாவது காய்ச்சலுக்குரிய மருந்துகளும் உடலில் ஏற்படும் நீரிழப்பை ஈடுசெய்தும், இரத்தப்பெருக்கு ஏற்படும்போது இரத்த மேற்றியும் சிகிச்சை அளிக்கப்படும். ஸ்ரீயோயிட் (Corticosteroids) மருந்தும் கொடுக்கப்படும்.

### தடுப்பு முறை

இவ் வைரசு ஒருவகை நுளம்பின் மூலமே பரவுவதால், நுளம்புக்கடியிலிருந்து பாதுகாத்துக்கொள்வதே மிகப்பிரதானமானபாதுகாப்பாகும். மேலும் நுளம்புபெருகும் குட்டைகள், குளங்கள், வடிகால்கள், பேணிகள் என்பனவற்றில் நீர்தேங்கி நிற்காமல் சுத்தமாக வளவுகளை வைத்திருப்பதால்நோய் பரவுவதை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தலாம்.

-மாறன்

---

# விண் வெளியில் முடிவடையாத பயணம்

1986ஆம் வருடம் சோவியத் யூனியன் 'மிர்'' (Mir) என்ற பெயரில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைத்து விண் வெளிக்கு அனுப்பியது. அப்போதிலிருந்தே முந்நூற்று ஐம்பது கிலோ மீற்றர் உயரத்தில் ஒரு நாளைக்கு பதினாறு தடவைகள் பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கிறது ''மிர்!''

சாதாரணமாய் பன்னிரண்டு விண்வெளி வீரர்கள் இருக்கக்கூடிய அந்தப் பரிசோதனைக் கலத்தில் இப்போது இருப்பவர்கள் இரண்டே பேர்! அவர்களும் விபரீதமான ஒரு. சூழ்நிலையில் திகலடித்துப் போயிருக்கிறார்கள்.

செர்ஜி க்ரிகலேவ் கதைதான் அதில் டரிதாபகரமானது நாற்பது நாட்கள் மட்டும் இருந்து விட்டுத் திரும்புகிற எண்ணத்தில் விண்வெளிக்குப் போனார் க்ரிகலேவ் அந்தச் சமயத்தில்தான் 'மிர்' மெல்ல பழுதாகத் தொடங்கியது விண்வெளி ஆராய்ச்சிகள் தவிர கலத்தில் உள்ள கோளாறுகளையும் க்ரிகலேவுக்குச் சரிப்படுத்தத் தெரியும்

அதனால் அவரை அங்கேயே நிறுத்தி வைத்துக்கொண்டார்கள். ஒரு கட்டத்தில் கோளாறு அதிகமானபோது, அவரது துணைக்கு அலெக்சாண்டர் வோல்காவ் என்பவரை மட்டும் வைத்துவிட்டு, மற்ற எல்லோரும் பூமிக்குத் திரும்பி விட்டார்கள்.

எவ்வளவே முயன்றுபார்த்தார் க்ரிகலேவ் . ஆனால், 'மிர்' மேலும் மேலும் கட்டுப்பாடு இழந்துகொண்டே வந்தது. 'இதை உடனே சரிப்படுத்த முடியாது. உள்ளே இருக்கிற இருவரும் கலத்தைக் கைவிட்டு உடனே பூமிக்குத் திரும்பி விடுவது நல்லது'' என்று சோவியத் விஞ்ஞானிகள் சொல்லத்தொடங்கினார்கள். அப்படிச் செய்தது உள்ளே இருக்கிற இரண்டுபேரை பூமிக்குக் கூட்டிவர, தனியாக ஒரு விண்கலத்தைச் செலுத்தவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் சோவியத்யூனியன் பல துண்டுகளாகச் சிதறி 'தனித்தனி நாடுகளாகி விட்டது இந்தக் குளப்பத்தில் விண்கலம் பற்றியும் அதிலுள்ள இரண்டு பேரைப் பற்றியும் எல்லோருமே சில நாட்கள் மறந்தே விட்டார்கள். விண்கலத்தில்சுற்றிக்கொண்டிருக்கும் வீரர்கள் இருவருக்கும் சோவியத்யூனியனுக்கு நேர்ந்த கதி பற்றி அரைகுறையாகத்தகவல்கள் போய்ச்சேர்ந்த போது அவர்களை பயம் மேலும் இறுக்கியது. இவர்களை மேலே அனுப்பிய (சோவியத்) நாடே இமே இப்போது இல்லை.

(2ஆம் பக்கம் பார்க்க)

# தேவாரம் பாடும் சாத்தான்கள்

சிறுகதை

துரை. சுப்பிரமணியம்

சின்னப்பர் தோட்டத் திற்குள் நுழைந்து தக்காளிக் கன்றுகளுக்குப் போய்க் கொண்டிருந்த தண்ணீரை மறித்துக்கட்டி, கத்தரிக்கன்று களுக்கு வாய்க்காலைக்கோலி விட்டுவிட்டு மெல்ல நிமிர்ந்து மண்வெட்டியை எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு வாய்க்காலுக்குவெளியேவந்து நேரமும் பத்துமணிக்குப் பிந்தி விட்டதால் தனது மனைவி தெய்வானை சாப்பாடு கொண்டுவருகிறாளோ என எட்டி எட்டிப்பார்த்தார்.

காலையில் வெறும் தேநீர் ஓரோடு தோட்டத்திற்கு வரும் சின்னப்பருக்கு காலை ஒன்பது பத்துமணிக்குள் பிட்டு அல்லது இடியப்பமும் நல்ல தேங் காய்ப்புளிவிட்ட உறைப்புச் சம்பலும் தேநீரும் எடுத்து வருவாள் அவரது மனைவி தெய்வானை.

'எங்கை உவளை இன்னும் காணேல்லை...... பசியென்டால் வயித்தைப்புடுங்குது.. நேரமும் பங்கை போட்டுது' என நினைத்துக்கொண்டு, மீண்டும் மண்வெட்டியைஎடுத் துத் தோளில் வைத்துக் கொண்டு புடோற பாத்திப் பக்கமாகத் திரும்பும் பொழுதுதான் தெய்வானை யின் பச்சைச் சேலையைக் கண்டார் சின்னப்பர். நேரம் போய்க் கொண்டிருந்ததால் அவருக்குப்பசியும் வயிற்றைக் காந்திக்கொண்டிருந்தது. அத னால் அவருக்குக் கோபமும் சற்றென வந்தது.

''நீ என்ன இவ்வளவு நேர மும் பேய்க்குப் பேய்ப்பார்த் தனியே... இஞ்சை மனுச னுக்குப் பசியென்டால் வயித் தைப் புடுங்குது ''

'' இல்லை அப்பா அந்தப் பொயிலைய வாங்குறதுக்கு நெல்லியடியிலையிருந்து ஆக் கள் வந்தவை அவைபொயி லையைப் பாப்பமெண்டினம் அதுதான் அதைக் காட்டிக் கொண்டு நிண்டிலை கொஞ் சம் நேரம் செண்டுதான் போச்சு... பின்னை நான் என்ன வேணுமெண்டு.''

சரி, என்னவாம் அவை?''

அவைக்குப் போயிலை நல் லாப் பிடிச்சுப் போச்சு விலை தான் கொஞ்சம் சூடாய் இருக்கெண்டினம் ..'

'' என்ன விலை சொன் னனி .?'

'நீங்கள் ராத்திரிப் பறஞ்சது போல தான் சொன்னநான் ..

''அது கூடிப்போச்சாமோ சரி அவை இருக்கட்டும் நீ இப்ப என்ன கொண்டுவந் தனி .?

புட்டும் சம்பலும் நேற்றைய இழங்குக் கறியும் கிடந்தது..போட்டுக்கொண்டு வந்தனான்...'

''சரி எடு எடு ...''

தெய்வானை கொண்டுவந்த சாப்பாட்டை இரசிச்சுச் சாப் பிட்டுக்கொண்டிருந்த சின்னப் பருக்குத் திடீரென ஒரு யோசனை வரவே,

''அந்தப் புடலங்காய்களை யும் தக்காளி, கத்தரிக் காய் ளையும் புடுங்கிக் கொண்டு போய் வை நாளைக்குச் சந் தைக்குக் கொண்டுபோவம்' என்றார்.

''என்ன எல்லாத்தை யுமோ ?''

'' ஆகப் பிஞ்சுகளை விட்டுப் பருவமானதாய் பார்த்து பிடுங்கன்.. இவ்வளவு கால மாய் பிடுங்கினாய்...

''இல்லையப்பா எல்லாத் தையுமோ எண்டு கேட்ட னான்...

எனக்குப் பருவம் தெரியும்.. நான் புடுங்குறன்.. மற்றது சொல்லவேணுமெண்டு நினை ச்சனான்... மற்றப் பொயிலை கொஞ்சம் கிடக்கு... தெரிஞ்சு சிப்பமாய்க் கட்டுறதுக்கு ..''

''ஓ அதை இண்டைக்கு இரவைக்குகட்டி வைப்பம்''

உதென்ன புட்டு மிஞ்சிப் போச்சே...

இரண்டு வாய்க்குத்தானே கிடக்கு உதை மிச்சமெண்டு கொண்டுபோகட்டே வாயுக் குள்ளே போட்டுட்டுக் கிண் ணத்தைத் தாருங்கோ...''

''முழுக்கச் சாப்பிட்டால் குனிஞ்சு பாத்திகட்டேலாது.'

''அதென்ன உம்மட்டும் தானே அதுவடிவாக்கட் டெல்லாம் வாயுக்குள்ளை போட்டுட்டுக் கிண்ணத்தைத் தாருங்கோ ..''

சின்னப்பர் எஞ்சியிருந்த பிட்டையும் சாப்பிட்டுவிட்டு கிண்ணத்துக்குள் தண்ணீரை ஊற்றி கையையும்கழுவிவிட்டு சிலாவி அப்பால் ஊற்றிவிட்டு கிண்ணத்தை தெய்வானையி டம் கொடுத்தார். தெய் வானை காய்கறிகளையும் பிடுங்கிக்கொண்டு வீடு திரும் பும் பொழுது நேரம்பன்னி ரண்டுக்குக் கிட்டவாய் விட் டது.

(2)

நேரம் இரவு ஒன்பது மணி யாய் விட்டது. சின்னப்பரும் மூத்தமகள் மாலினியும் புகை யிலையைத் தெரிந்து சிப்ப மாய்க் கட்டிக் கொண்டிருந் தனர். மற்றப்பிள்ளைகள் எல் லோரும் படுத்துவிட்டார்கள்.

சின்னப்பர் கட்டிய புகையி லைச்சிப்பத்தைஒரு பக்கத்தில் வைத்துவிட்டு கைவிளக்கை யும் தூக்கிக்கொண்டுபோய் அறைக்குள் பரவியிருந்த காய் கறிகளைப் பார்த்தார். மனத் திற்குள் அவருக்கு எவ்வளவு சந்தோசம்? பூத்துச் சொரிந் திருக்கும் கொண்டல் மரம் போல அவர் மனம் பூரித்து இருந்தது. மரக்கறிகள்யாவும் 'நெருப்பு விலை' விற்றுக் கொண்டிருந்த காலம் அது. நாளைக்கு அவ்வளவு மரக் கறிகளையும் சந்தைக்குக் கொண்டுபோனால் எவ்வளவு பணம் அவரின் மடிக்குள்கனக் கும். சில்லறையாய் தாளாய்.

''என்னப்பா சாப்பாட் டைப் போடட்டே'' தெய் வானை குசினிக்குள் இருந்து கொண்டு கேட்டாள்.

''ஓமோம் போடு போடு... இண்டைச்குப் பாத்தி கட்டி னது உடம்புக்குக் கொஞ்சம் அலுப்பாய்த்தான் கிடக்குது.. சாப்பிட்டுட்டுப் படுப்பம்... நாளைக்குச் சந்தைக்குப் போகவேணும்...''

நாளைய சந்தை வியாபா ரத்தை எண்ணிக்கொண்டி ருந்த சின்னப்பர் சாப்பிட்ட பின் அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

(3)

புளியங்கூடலிலிருந்து சனங் கள் இரவோடு இரவாக தத் தமது வீடு வாசல்களை விட்டு விட்டு உடுத்திருந்த புடைவை களோடு வெளியேறிக் கொண் டிருந்தனர் இராணுவம் வந்து கொண்டிருப்பதாகக் கதைத் துக் கொண்டு அல்லோலகல் லோலப்பட்டனர்

சின்னப்பரும் தனது புகை யிலைச் சிப்பங்களையும் மரக் கறி, ஆடு, மாடுகளையும் அப்படியே விட்டு விட்டு கை யில் அகப்பட்ட உடுப்புகளை யும் கையில் இருந்த பணத் தையும் எடுத்துக்கொண்டு ஒன் பது பிள்ளைகளும் மனைவி யும் அவருமாய் யாழ்ப்பா ணத்தை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தார்.

சின்னப்பரின்மனதில் நிறைய வேதனைகள். அவருக்கு மட்டு மல்ல அறிவு தெரிந்த அவரு டைய பிள்ளைகள் வரை எல் லோருக்கும்தான்.

அகதிகளாய் அனாதை களாய் அல்லல்பட்டு வரும் பொழுது... பிஞ்சுமனங்களுக் கும் வேதனைதான்.

'நாங்கள் இப்ப எங்கை யப்பா போய்க் கொண்டிருக் கிறம்' மூத்த மகள் மாலினி கேட்டாள்.

'யாழ்ப்பாணத்துக்கு'

'அது சரி, எங்கை போய் இருக்கப்போறம் ?'

'ஏதாவது பள்ளிச்கூடத் திலை...?

'எத்தனை நாளைக்கு ?

'அதை நான் என்னெண்டு இப்ப சொல்றது நீங்கள் இப்ப கெதியாய் நடவுங்கோ. யாழ்ப்பாணம் போய் மிச்சத் தைப்பாப்பம் .. திருந்தாதி யும் அடிக்குது... விடியப் போகுது

(4)

அகதிகளின் நிவாரணச் சாமான்களை எடுத்துக் கொண்டு சின்னப்பர் வெய்பி லுக்குள்ளால் வந்து கொண்டி ருந்தார். நேரமும் இரண்டு மணியைத்தாண்டி விடடது. தெய்வானையும் மாலினியும் சாப்பிடாது சின்னப்பருக்காக காத்துக்கொண்டிருந்தார்கள்.

சின்னப்பர் கொண்டு வந்த அகதிகளின் நிவாரணச்சாமா ன்களை மாலினி வாங்கிக் கொண்டுபோய்தாங்கள் தங்கி இருக்கும் பாடசாலை அறைக் குள் வைத்தாள்.

''காலை வெள்ளெணப் போய் ஏன் இவ்வளவு நேரம் செண்டது...?''

நிவாரணம் எடுக்கிறதுக்கு எவ்வளவு சனங்கள் ......உட னேயே தந்து விடுவாங்களே... சரி பிள்ளைகளெல்லாம் சாப் பிட்டுட்டுதே...

''ஓ அதுகளெல்லாம் சாப் பிட்ட்டுதுகள் பெரியவள் தான் இன்னும் சாப்பி டேல்லை...

சரிசரிசாப்பாட்டைக்கொண்டு வா ..

நான் சாப்பிட்டுட்டு இயக் கப் பொடியங்களின்ரை காம்பு க்குப் போய்வரவேணும்...''

''ஏன் காம்புக்கு ?''

எங்கையாவது வீடு ஒண்டு எடுத்துத்தரச் சொல்லிக் கேக் கப் போறன் இந்தச் சின்னப் பள்ளிக்கூடத்திலை நாங்கள் படுகிற அவலத்தைப் பாக் கேல்லையே ..

''வீடு எடுத்துத் தருவி னமே ..?''

''முடியுமெண்டால் கட்டா யம் எடுத்துத்தருவினம் எத்தி னையோ அகதிகளுக்கு எடுத் துக் குடுத்திருக்கினம்...''

''அப்பபோய்உண்ணாணைக் கேட்டுப்பாருங்கோ''

(5)

பார்வதிக்கிழவிக்குநித்திரை ரவில்லை. எப்பொழுது விடி யுமென்று காத்துக்கொண்டி ருந்தாள். விடிந்ததும் கால் முகம் கழுவி சுவாமி கும்பிட்டு விட்டு நெற்றியில் திருநீறும் வாய்க்குள் கந்தசஷ்டி கவச த்தை முணுமுணுத்தபடி வாரித்தம்பி வாத்தியாரிடம் ஓடினாள்.

வாத்தியார் அப்பொழுது தான் மாட்டில் பால் கறந்து கொண்டிருந்தார். வாத்தியார் வரும்வரை பார்வதிக்கிழவி வெளி விறாந்தையில் கதிரை யில் இருந்தாள்.

வாத்தியார் பால் கறந்து முடிந்ததும் பாற்செம்போடு வெளிவிறாந்தைக்கே வந்து விட்டார்.

''ஆர் பார்வதி ஆச்சியோ... என்ன விசயம் இந்த வெள் ளெண ?''

''என்ரை மூத்தவள் கனடா விலையெல்லே அவளின்ரை வீடு சும்மாதான்கிடக்கு உந் தப்புலிப்பெடியள் வந்து விசா ரிச்சுப்போட்டுப் போயிருக்கி னம்... அவங்கள் கண்டநிண்ட சனங்களையெல்லாம்கொண்டு வந்துஇருத்·திப்போடுவாங்கள் அதுதான் நீங்கள் தான் ஒரு யோசினை சொல்லித்தர வேணும் ..''

''சரி நீங்கள் போங்கோ... நான் யோசிச்சுப்போட்டு பின் னேரம் போலை வாறன்''

''ஓம் தம்பி மறந்து போடாதை...''

புலிகளின் இயக்கக் காரியா லயத்தில் பார்வதிக்கிழவியும் வாரித்தம்பி வாத்தியாரும் தலையைத் தொங்கப்போட்ட வண்ணம் நிற்கிறார்.

''ஆச்சி நாங்கள் வந்து விசாரிச்சிப் போட்டுப் போன அடுத்த நாளே உங்களின்ரை மகளின்ரை வீட்டிலை 'தமிழர் அறநெறிக் கழகம்' ஒன்று தொடங்கி இருக்கு. பெரிய பெயர்ப்பலகையும் ஒண்டு தொங்குது.. இது எங்களைப் பேய்க்காட்ட வாத்தியார் தொடங்கிய கழகம்தான் அது அயலுக்கை என்ன நடக் கிறதென்று எல்லாம் எங்களுக் குத் தெரியும் நாங்கள் உங்க ளுடைய வீட்டை ஆசைக்கு எடுக்கேல்லை. அந்த வீடு இவ்வளவு நாளும் வெறும் வீடாய்த்தான் இருக்கு தீவுப் பகுதியிலையிருந்து அனைத் துப் பொருள்களையும் இழந்து அனாதைகளாய் வந்த குடும் பமொன்றுக்குத் தற்காலிக மாகக் கொடுத்து உதவத் தான் அந்த வீட்டை நாங்கள் பார்த்தோம்.நீங்கள் எங்களை உச்சிப் போட்டு அங்கை ஒரு அறநெறிக்கழகம் தொடங்கி இருக்கிறது போல எங்களுக் குக் காட்டி ஏமாத்தப்பாக்கி றீர்கள் ... நீங்கள் தேவாரம் பாடுகிற சாத்தான்களைப் போலை ஆட்கள் ... சமூகத் துக்கு எந்த உதவியும் செய்ய முன்வாறதில்லை கழுத்திலை உருத்திராட்சமாலையும் வாயில கந்தர்சஷ்டிகவசமும் முணுமுணுத்துக் கொண்டுஇப் படியான ஏமாற்று வேலை யிலதான் உங்களைப் போலை ஆட்கள் ஈடுபடுகினம் இனி மேல் உப்படியான வேலை செய்யாமல் கொஞ்சமாவது எங்களோடை ஒத்துழை யுங்கோ கஷ்டப்பட்டு அவ லப்பட்டு பிள்ளைகுட்டிக ளோடை வாறதுகளுக்கு கொஞ்சமாவது இரக்கம் காட் டுங்கோ .. திறப்பைத்தந்து விட்டு நீங்கள் போகலாம்''

பொறுப்பாளர் இவ்வளவும் சொன்னதைக் கேட்ட பார்வ திக்கிழவிக்கு பெரிய அவமா னமாய்ப்போய்விட்டது பார் வதிக் கிழவிக்கு மட்டுமல்ல உதவிக்குப்போன வாரித் தம்பி வாத்தியாருக்கும் தான்.

பார்வதிக் கிழவி சேலைத் தலைப்பில் முடிஞ்சு வைத்தி ருந்த திறப்பை மெல்ல அவிட் டுக் கொண்டிருந்தாள்.

(6)

பூவும் பிஞ்சும் காய்களு மாய் நின்ற மரக்கறிச் செடி கள் எல்லாம் சிங்கள இராணு வச் சிப்பாய்களின் பூட்சில் மிதிபட்டு நசுங்கி வாடி கெட் டொழிந்து போனதை எண் ணும் பொழுது கையில் வைத் திருக்கும் மண்வெட்டியால் அந்த இராணுவத்தினரின் நெஞ்சங்களைப் பிளக்க வேண் டும் போல் இருந்தது சின்னப் பருக்கு.

பெரியதொரு பெருமூச் சோடு புலிகள் எடுத்துக் கொடுத்த தற்காலிகமான வள

(6ஆம்பக்கம்பார்க்க)

## சூரிய நமஸ்காரம்

ஒளிக் குருதி வீச்சோடு எழுகின்ற
சூரியனே பார்
இரத்தப் பிடிப்பின்றிச் சோகையுற்றோம்
உன் குருதியை எமக்குள் பாய்ச்சு

குந்தியீன்ற புத்திரனைப்போல
எம்மைத் தள்ளி விடாதே
சொல்
பேர் சொல்லியழைக்கவும்
பிள்ளைகளற்றுப் போவாளா எம் தாய்?

தன் உதிரக் கனிகளின்
ஊர் கொள்ளா விளைச்சல்
வீடுவந்து சேர்கவென
ஓயாது புலம்புகிறாள்

கூவிக் கூவிப் பரவெளியெங்கும்
அலையும் அவள் குரல்
உனது கதிர்களில் ஊடறுத்து
அதிரவிலையா?

ஒளிக்கனி நாடி உன்னிடத்தே
சிறகடித்த பறவைகளின் சங்கீதத்தை
எரிந்த சாம்பரினின்றும் மீட்டுத்தா
இருள் படிந்த புதைவுகளினின்றும்
புதிய குருதிப் பொலிவோடு
இவள் பிள்ளைகளை எழுப்பித்தா

வீர்யரின் பூமியாக இது விளங்கட்டும்
சோகையுற்ற வாழ்நிலத்திலும்
சுதந்திரம் வரண்ட தேசத்திலும்
வலம் வருதல் உனக்கு வெட்கமாயிருந்தால்
ஒளிநிறை வாழ்வின்
உன்னதத்தை எமக்குத்தா!

-சு.வி

# இடதுசாரிகளுக்கு வெட்டிய குழியில் தமிழர்களைத் தள்ளிய தென்னிலங்கை அரசியல்

மு. திருநாவுக்கரசு

அரசியல் உள்ளோட்டத்தையும் அதற்கான காரணங்களையும் உணர்ந்து கொள்வதென்பது அரசியல் ஆய்வில் ஒரு சிறப்பம்சமாகும். இலங்கையில் இடதுசாரிகளின்எழுச்சியும் வீழ்ச்சியும் அத்தகைய எழுச்சியும் வீழ்ச்சியும் இனப்பிரச்சினையில் ஏற்படுத்திய தாக்கமும் மாற்றமும் இடதுசாரிகள் எதிர்கொள்வதற்காக வலதுசாரிகள் இனப்பிரச்சினையை கையாண்ட விதமும் இக்கட்டுரையில் நோக்கப்படும்.

இனப்பிரச்சினையானது மேற்படையானதல்ல அது அடிப்படையானது ஆயினும் மேற்படையில் ஏற்படும் மாற்றங்கள் இனப்பிரச்சினையின் உக்கிரத்தை தணிக்கவோ அன்றி தூண்டவோ உதவுகின்றன. இவ் வகையில் இலங்கையின் இடதுசாரி, வலதுசாரி அரசியல் போட்டிக்குள் இனப் பிரச்சினையானது எவ்வாறு சிக்குண்டது என்பதையும் இறுதியில் இடதுசாரிகள் எவ்வாறு யாரால் தோற்கடிக்கப்பட்டனர் என்பதையும் இக்கட்டுரையில் அவதானிக்கலாம்.

இடதுசாரிகளுக்கும் வலதுசாரிகளுக்கும் இடையிலான போராட்டம் முனைப்புப் பெற்ற கால கட்டத்தில் சிங்கள வலதுசாரிகள் இடதுசாரிகளை தோற்கடிக்க தமிழ்த் தலைமையின் உதவியை நாடினர். இந் நாடகத்தின் ஒரு கட்டம் நாற்பதுகளின் பிற்பகுதியில் அரங்கேறியது.

இறுதியில் இடதுசாரிகளுக்கு சாவுமணி அடித்தது. இடதுசாரிகளின் நேர் எதிரியாகத் தோன்றிய ஐக்கிய தேசியக் கட்சியல்ல; மாறாக இடதுசாரிகளின் நேர் சகதியாக காட்சியளித்த பண்டாரநாயக்காவும் அவரின் சுதந்திரக்கட்சியும்தான்.

இவற்றை விளக்குவதற்கான அக்கால அரசியல் சூழலை சற்று நோக்குதல் நன்று இலங்கையில் முதலில் கட்சி அமைத்தவர்கள் மாக்சிச இடதுசாரிகள்தான் 1935 ஆம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சியும், 1943 ஆம் ஆண்டு இலங்கை கொமினிஸ் கட்சியும் அதன் பின்பே 1944 ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும், 1946 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியும் 1949 ஆம் ஆண்டு சமஷ்டிக்கட்சியும் 'தமிழரசுக்கட்சி' ஆரம்பமாகின இவற்றின் பின்பு தான் 1951 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சி ஆரம்பமாகியது

நாற்பதுகளில் மாக்கிச இடதுசாரிகள் பெரிதும் பலமுற்றிருந்தனர். 1947 இல் எதிர்க்கட்சித் தலைமை இடதுசாரிகள் வசம் தொழிற் சங்கங்கள் மிகப் பெருமளவுக்கு இடதுசாரிகளின் கையில் இருந்தன. வேலை நிறுத்தம் அரசை அச்சுறுத்தும் ஒரு கூரிய ஆயுதமாக இருந்த காலமது

மறுபுறம் ஜி ஜி பொன்னம்பலம் டி. எஸ் சேனநாயக்காவுக்கு எதிராக முதலில் போர்க்கொடி உயர்த்தியிருந்த காலம் அது. அக்கால கட்டத்தில் டி எஸ். சேனநாயக்காவின் அரசியல் பார்வையில் இனப்பிரச்சினை ஆபத்தானதாக தோன்றியது தமிழரை பெரிதும் தோற்கடிப்பதற்குரிய அரசியல் பலத்தை டி. எஸ் பெற்றிருந்தார். பிரித்தானியரிடம் இலங்கையை அவர்கள் வேண்டியவாறு விட்டுக் கொடுத்துவிட்டு அதற்குப்பதிலாக தனது குடும்ப ஆட்சி அதிகாரத்தினையும் தமிழரை ஒடுக்குவதற்குரிய வல்லமையையும் பிரித்தானியரிடமிருந்து பெற்றுக்கொண்டார். இரண்டு பிரித்தானிய இராணுவத்தளங்கள் இலங்கையில் அமைக்க அனுமதித்த சூழலில் இடதுசாரிகளை வன்முறையால் ஒடுக்குவதற்குரிய வல்லமை தன்னிடம் உண்டு என்ற நம்பிக்கையில் தமிழர்களுக்கு எதிரான அரசியலை முனைப்புடன் நடாத்த டி. எஸ் முனைந்தார் இதனால் பொன்னம்பலம்தலைமையை எதிர்ப்பதில் டி எஸ் பெரிதும் அக்கறை காட்டினார்

ஆனால் ஜே ஆரின் சிந்தனை மறுவளமாய் அமைந்தது. தமிழர்களை அணைத்து இடதுசாரிகளை எதிர்ப்பதே பிரதானமானதாக அவருக்குப் பட்டது. டி. எஸ் சேனநாயக்காவுக்கு ஆலோசனைகளோ அல்லது அபிப்பிராயங்களோ தெரிவிக்கக்கூடிய திராணி இருந்த ஒருசிலருள் ஜே ஆரும் ஒருவர். இதன் பொருட்டு ஒருநாள் மாலை வேளை டிஎஸ்ஐயைச் சந்தித்து ஜே ஆர் நீண்ட நேரம் உரையாடினார். அப்போது ஜீ ஜீ பொன்னம்பலத்தை அரசாங்கத்தில் சேர்க்குமாறும் அதற்கென அவருக்கு மந்திரிப்பதவி வழங்குமாறும்கேட்டுக்கொண்டார். டி. எஸ் சில காரணங்களைக் கூறி மறுத்தபோதும் இறுதியாக ஜே ஆர் ஒருகருத்தை ஆணித்தரமாக கூறியிருந்தார். அதாவது இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாத தமிழர்கள் அல்ல இப்போது எமது பிரதான எதிரிகள். மாறாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடியவர்களாய் எம் மத்தியில் இருந்து வளர்ந்து வரும் இடதுசாரிகளே எமது பிரதான எதிரிகள் இடதுசாரிகளை பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் வாதத் திறனினால் தோற்கடிக்கக்கூடிய வல்லமையுள்ள பொன்னம் பலத்தையும் அவரின் தலை

(6ஆம் பக்கம் பார்க்க)

# எமக்கென ஓர் அரசு உருவாகும் போது எழுத்தாளர் மீதும் அதன் ஒளிவீசும்!



வரதர் என்ற பெயரில் எழுதும் தி.ச.வரதராசர்(வயது68)தமிழீழ இலக்கியஉலகம் பெருமைப் பட வேண்டிய ஒருமூத்த எழுத்தாளர். நாற்பதுகளில் எழுதத தொடங்கியவர். டாக்டர் மு.வரதராசனின் சிறப்புரையுடன் 1960 இல் கயமை மயக்கம் என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டார்.ஈழத்துச் சிறுகதை இலக்கிய வரலாற்றில் ஒரு பகுதியைத் தெரிந்த வரதர், தம் எழுத்துலக வாழ்க்கையில் சிலவற்றை இச் செவ்வியில் தருகின்றார்.

செவ்வி தொகுப்பு:-மதன்-

எமது பத்துப் பன்னிரண்டு வயதுக் காலத்தில் கிடைத்த புத்தகங்கள் சஞ்சிகைகள், எல்லாவற்றையும் மிகுந்த ஆவலோடு படித்தேன். முக்கியமாகக் கதைகளைப் படித்தேன் ஆனந்த போதினி, பிரசண்ட, விகடன், ஆனந்தவிகடன், கலைமகள் முதலிய சஞ்சிகைகளில் வந்த கதைகளைப் படித்த போது எனக்கு அவைகளைப் போன்ற கதைகளை எழுத வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. நான் கண்டு, கேட்டு. படித்து அறிந்த பட்டறிவினால் சிந்திக்கிறேன். சிந்தனையின் விளைவாகப் புதிய கருத்துகள் தோன்றும் போது அவற்றுக்கு எழுத்துருவம் கொடுக்கிறேன் என்கிறார் மூத்தஎழுத்தாளரான வரதர்.

தொடக்க காலத்தில் நானும் கதை எழுதிப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால் எழுதினேன். பின்பு என்னுடைய எழுத்துக்கள் அச்சில் வருவதைக் காணும் ஆசையால் எழுதினேன். சுமார் பத்துப்பதினைந்து ஆண்டுகளின் பின்பு இந்த ஆசைகள் தீர்ந்து என்னுடைய எண்ணங்களை மக்கள் முன் கொண்டு வர வேண்டும் படிப்பவருக்கும் என்னுடைய எழுத்துக்கள் ஏதும் பயன்செய்ய வேண்டுமென்ற விருப்பினால் எழுதுகிறேன்.

எழுத்தாளனுடைய சமூக மரியாதை (ஸ்டேட்டஸ்)என்ற அடிப்படையில் கூறுகையில்,

மருத்துவரையும் பொறியியலாளரையும் விட ஒரு எழுத்தாளனுக்கு சமூக மரியாதை - மதிப்பு அதிகமென்பது வெளிச்சமானது. இன்றைய சமூகத்தில் உங்களுக்குத் தெரிவதெல்லாம் அவர்களுடைய பொருளாதார நிலைதான். பொருளாதாரத்தில் சமநிலையிலுள்ள ஒரு மருத்துவன், பொறியியலாளர், ஒரு எழுத்தாளன் என்று மூன்று பேரை எடுத்துக் கொண்டு பார்த்தால், எழுத்தாளனின் மதிப்பு மிகவும் உயர்வானது.

இன்னொன்று சொல்லலாம் எமது சமூகத்தில்-ஒரு குறுகிய எல்லைக்குள் - ஒரு மருத்துவனை அறியப்பட்ட அளவுக்கு எழுத்தாளர் அறியப்படுவதில்லை. அறியப்படாத இடத்தில் மதிப்பும் இல்லை; மரியாதையும் இல்லை

★ உங்கள் கடந்த இருபத்தைந்து வருடகால எழுத்துலக அனுபவம் எப்படி?

இருபத்தைந்து ஆண்டுகளென்பதுமிகச் சொற்பகாலம் இதற்குள் பெரிய மாற்றம் என்று சொல்லுவதற்கு எதையும் காணோம். இதையே நாற்பது ஐம்பதுஆண்டுகளுக்கு முன் என்றுகேட்பீர்களானால் அப்போது என் போன்ற சிலர் எழுதத் தொடங்கிய காலம் ஈழத்தின் அன்றைய எழுத்தாளர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் இப்போது அநேக இளைஞர்கள் எழுத்துலகுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் எழுத்தின் தரமும் நன்குவளர்ந்திருக்கிறது.

★ நீங்கள் ஒரு எழுத்தாளராக மட்டுமன்றி நூல் வெளியீட்டாளராகவும் இருந்திருக்கிறீர்கள் வெளியீட்டுத் துறையில உங்கள் சாதனை?

ஐம்பதுகளுக்குப் பின்னால் எழுத்துத் துறையை விட வெளியீட்டுத் துறையிலேயே எனக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது அச்சுத் துறையே எனது தொழிலாக அமைந்தது அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்

மறுமலர்ச்சி இதழ் வெளிவந்த பிறகு ஆனந்தன். புதினம், தேன்மொழி, வெள்ளி ஆகிய சஞ்சிகைகளை ஒன்றன் பின் ஒன்றாக வெளியிட்டேன் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின்கட்டுரைத்தொகுதியை வெளியிட்டதைத் தொடர்ந்து வித்துவான் பொன். முத்துக்குமாரன், நாவற்குழியூர் நடராசன், மஹாகவி, முருகையன், பேராசிரியர் கைலாசபதி, கனக. செந்திநாதன், காரை சுந்தரம்பிள்ளை, செங்கை ஆழியான், ஈழத்துச் சோமு.சாந்தன் முதலிய ஈழத்து எழுத்தாளர்களின் நூலகள் 'வரதர் வெளியீடு' களாக வெளிவந்தன.

தமிழ்நாட்டிலிருந்து மலிவுப் பதிப்பு நூல்கள் வெளிவந்தபோது திருக்குறளும் மெழிப்புரையும்என்ற நூலை நானே எழுதி அதில பத்தாயிரம் பிரதிகளை அச்சிட்டு ஒரு பிரதி 65 சதத்திற்கு விற்கக் கூடியதாகச் செய்தோம்.

தமிழில்'டைரக்டரி'ஒன்றை வெளியிடவேண்டுமென்று துணிந்து 'வரதனின் பல குறிப்பு' என்ற நூலை வெளியிட்டேன் நீலவண்ணன் எழுதிய வரதர் வெளியீடாகவந்த '24 மணி நேரம்' என்ற நூல் ஈழத்து நூல் வெளியீட்டுந் துறையிலே ஒரு சாதனை படைத்தது. இந்தத் துறையிலே நான் செய்தவைகளை நினைத்து மனம் பூரிக்கின்றேன் அதேசமயம் இன்னும் என்னன்னமோ செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

நீங்கள் குறிப்பிடும் பிற நாட்டுப் பிறமொழி எழுத்தாளர்களை நான் படித்திருக்கவில்லை (இட்டாலோ கால்வினோ - கியூபா எர்ணஸ் ஹேகார்டினல் நிக்காருவா கோமோ ஜோ- சீனாஅழுக்கம்செவ்வி கண்டவருடையது) எனினும் ஈழத்து எழுத்தாளர்களுக்கு ஏன் உலகளாவிய புகழ் கிடைக்கவில்லை என்பது பற்றி எனது கருத்தைச் சொல்லலாம் உலகளாவிய சஞ்சிகைகள் பிரசுரங்களில் ஒரு எழுத்தாளனுடைய படைப்புகள் வெளிவந்தால் தான் அவனுடைய கருத்துக்கள் உலகெங்கும் பரவ முடியும் அத்தகைய வாய்ப்புக்கள் தமிழ் எழுத்தாளருக்குக் கிடைப்பதில்லை. நாங்கள் ஒரு மூலையில் இருளில் கிடக்கிறோம். அன்றியும் அந்த உயர்ந்த நிலைக்கு ஈழத்து எழுத்தாளரின் படைப்புகள் பெரிய அளவில் வரவில்லையென்றும் நினைக்கிறேன். எமக்கென்று ஒரு நாடும் ஒரு அரசும் வரும்போது எழுத்தாளர்களின் மீதும் ஒளி வீசும் என்று எதிர்பார்க்கிறேன் என்றார் வரதர்.

★ நீங்கள் ஒரு அச்சக உரிமையாளர், இந்தச் சூழலில் எழுதுவது எப்படிச் சாத்தியமாகிறது?

நான் மட்டுமல்ல ஈழத்திலுள்ள பெரும்பான்மை எழுத்தாளர்கள் அனைவரும், எழுத்தைத் தொழிலாகக் கொண்டவர்களல்லர் பொருளாதாரத் தேவைக்காக எங்களுக்கு ஒரு தொழில் உண்டு. அதைவிட எங்களுடைய மன நிறைவுக்காகச் செய்கிற தொழிலே எழுத்து. எங்களுடைய ஓய்வு நேரங்களில் பெரும்பகுதியை இந்த எழுத்துக்காகச் செலவிடுகிறோம். இதில் பிரச்சினை எதுவுமில்லை உலகெங்குமுள்ள சிறந்த எழுத்தாளர்கள் பலரும் இன்னொரு தொழிலையும் செய்துகொண்டிருக்கிறார்கள்

★ மறுமலர்ச்சிக்கால இலக்கிய அனுபவங்கள் - ?

தமிழ் நாட்டில் மணிக்கொடி காலத்தில் அல்லது அதனை மருவிய கிராம ஊழியர், சித்தி கலாமோகினி வெளிவந்த காலத்தில் நானும் மறுமலர்ச்சியை வெளியிட்டு வந்தேன். அக்காலத்திய 'மறுமலர்ச்சி'க்கால எது இலக்கிய அனுபவங்கள் சில வரிகளில் சொல்லக்கூடியவையல்ல ஒரு கட்டுரையாக எழுதக்கூடியது ஆனால் எனது நினைவாற்றல் மிக மோசமாக இருப்பதால் அதையும் சரிவரச் செய்ய முடியாதவராக இருக்கிறேன்.

★வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

வழக்கமாக எல்லாசெவ்விகளிலும் கேட்கப்படும் இந்தக் கேள்வியை, எங்கே கேட்காமல் விட்டுவிடுவீர்களோ என்று நினைத்தேன். ஏனென்றால் இது பற்றிச் சொல்வதற்கு என்னிடம் முக்கியமான ஒரு கருத்து இருக்கிறது. எழுத்தாளர்கள் நிறையச் சிந்திக்க வேண்டும் வழக்கமாக எல்லோரும் போகும் பாதையிலேயே நாங்களும் சிந்தித்துக் கொண்டிராமல புதிய புதிய கோணங்களில் சிந்திக்க வேண்டும் உதாரணமாக. கடவுள், கற்பு பண்பாடு என்ற பொருள்கள் பற்றியெல்லாம் ஒரு குருட்டுத்தனமான நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டிருக்கின்றோம் தமிழ்ப்பெண்கள் தமது தலைமயிரை நீளமாக வளர்த்து வைத்திருப்பதே தமிழர் பண்பாடு என்றும். அதை அவர்கள் வெட்டி அழகு செய்தால் பண்பாடு நாசமாகிறதென்றும் நினைக்கிறோம். இப்படி எத்தனையோ இவை எல்லாவற்றையும் பழைய நம்பிக்கைகளின் அடிப்படையில் சிந்திக்காமல் பகுத்து அறிந்து சிந்திக்க வேண்டும். சரியான கருத்துக்களை மக்களுக்கும் சொல்ல வேண்டும்.

## இடதுசாரிகளுக்கு

மையையும் வெளியே விட்டு வைக்காது உள்ளே எடுப்பது சிறந்தது என்ற பொருளில் தனது அபிப்பிராயத்தைவெளியிட்டார். ஜே. ஆரின் இந்த அபிப்பிராயத்தையும் ஆலோசனையையும் ஏற்றுக்கொண்ட டி. எஸ் பொன்னம்பலத்தை மந்திரி சபையில் சேர்க்கத்தயாரானார்.

இடது சாரிகள் அரசுக்கு அச்சுறுத்தக் கூடிய வல்லமை பெற்றிருந்தமையால் தான் பொன்னம்பலத்தை டி. எஸ் அரவணைத்தார். ஒரு வகையில் இடது சாரிகளின் வளர்ச்சி என்பது தமிழர்களை வலது சாரிகள் கண்டபடி பாதிக்க முடியாத ஒரு சூழலை இக்காலத்தில் கொடுத்தது எனலாம். இடது சாரிகளின் பொருட்டே வெளிப்படையாக தமிழர்களுக் கெதிரான உக்கிரத்தை வலது சாரிகள் தணிக்க முடிந்தது. அந்த வகையில் அக்காலகட்ட இடது சாரிகளின் வளர்ச்சி என்பது தமிழர்களின் பக்கம் ஒரு நல்ல அம்சம்தான். இந்தப் பாதையில் இடது சாரிகள் வளர்ச்சியடையாது தோற்றுப் போனமை என்பது எமக்குப் பாதகமாய் அமைந்தது.

இரண்டாம் கட்டமாக இடது சாரிகளைத்தோற்கடிக்கும் சக்தி இடது சாரிகளின் நேசசக்தியாக தோன்றிய பண்டாரநாயக்காவை மையமாகக் கொண்டெழுந்தது. பண்டாரநாயக்கா ஐ. தே. க வின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர். ஆனால் இடது சாரிகளை எதிர்கொள்வதில் டி எஸ் கணிசமானவளவு நம்பிக்கையைப் பெற்ற பின்பு தனது குடும்ப அரசியல் ஆதாயத்துக்கு முதன்மை கொடுக்கலானார் இந் நிலையில் பண்டாரநாயக்கா 1951 ஆம் ஆண்டு ஐ தே க. வை விட்டு வெளியேறினார். பண்டாரநாயக்கா கட்சியை விட்டு வெளியேறிய காலத்தில் பொன்னம்பலமும், டி எஸ் சும் ஒன்றாக இருந்தனர். பொன்னம்பலம் பண்டாவோடு அரசியல் நட்பு பாராட்டும் நிலையும் தென்படவில்லை பண்டாரநாயக்காவின் பிரதான பிரச்சினை சேனநாயக்காவின் குடும்பத்தை எதிர்த்து தான் பதவிக்கு வருவதுதான். இவர் 1951 ஆம் ஆண்டு சு. க. அமைத்த காலத்தில் தான் பதவிக்கு வருதலின் பொருட்டு பல்வேறு சக்திகளுக்கும் அனுகூலமான கொள்கையை வகுக்கலானார். அக்காலத்தில் இலங்கையில் இருந்த சக்திகள் சிங்கள பௌத்தம், இடது சாரிகள், தமிழர்கள் என்பனவாகும். இவற்றிற்கேற்ப தன்னை ஓர் இடது சாரிப் போக்குள்ளவனாகவும் அதே வேளை சிங்கள - பௌத்தரின் தலைவனாகவும், தமிழரின் உரிமைகளில் அக்கறை உள்ளவராகவும் காட்டிக் கொண்டார் உண்மையில் இது ஐ தே க க்கு எதிரான ஒரு மூலோபாயமே. இவற்றை மாக்சிஸ்ட்டுக்கள் கூறுவது போன்ற பாராளுமன்ற முறைக்கு எதிரானவாக அல்லாமல் பாராளுமன்றம் மூலமே அணுக வேண்டும் என்ற கொள்கையை முன் வைத்தார். மாக்சிச இடதுசாரிகள் முன்வைத்த காணிக் கொள்கை, தேசியமயமாக்கற் கொள்கை, அந்நிய கொம்பனிகள் அகற்றுதல் என்பனவற்றை முன்வைத்ததன் மூலம் இடது சாரிகளின் வாக்கை கவரக்கூடியவரானார். சிங்கள பௌத்தருக்கு தலைவராகவும் அதேவேளை தமிழருக்கு உரிமை வழங்குபவராகவும் இருக்கும் நிலை என்பது அவருக்கு சாத்தியமற்றதாய் போனது. இடது சாரிகளின் ஆதரவை அல்லது வாக்கை பெறும் சூழல் சாத்தியமானதும் தமிழரின் அனுசரணை அவசியமற்றதாகப் போனது. இடது சாரிகள் பொருளாதார சமூக ரீதியாக நல்ல கொள்கைகளைக் கொண்டிருந்த போதிலும் பௌத்த கலாசாரத்துக்கு இசைவானவர்களாக இல்லாதிருந்தனர் ஆதலினால் இடதுசாரிக் கொள்கைக்கும் பௌத்தத்துக்கும் சார்பான ஒருவரை காணும்போது அவர் பக்கம் மக்கள் திரும்புவதும் சாத்தியமானது. இடது சாரிக் கொள்கையில் அதிதீவிரமான ஆதரவாளர்களைத் தவிர ஏனைய இடதுசாரிகள் பண்டாரநாயக்காவின் பக்கம் சாரலாயினர் பிலிப்குணவர்த்தனா தலைமையிலான புரட்சிவாத லங்கா சமசமாஜக் கட்சி பண்டாரநாயக்காவின் மகாஜன எக்சத்பெரமுன கூட்டணியின் ஓர் அங்கமாகியது அத்துடன் ஏனைய மாக்சிய இடதுசாரிக் கட்சிகளும் பண்டாரநாயக்காவுடன் 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் சில தொகுதிகளில் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டனர். இதனால் பண்டா இடதுசாரிக் கொள்கை உடையவர் என்ற தோற்றம் மேலும் வலுப்பெற்றது. இந்நிலையில் இலங்கை அரசியலில் இடதுசாரிகளுக்கும் வலது சாரிகளுக்குமிடையிலான நேரடிப் போர் ஓய்ந்து பண்டாவின் நடுவழிப்பாதை முன்னணிப் பெறலாயிற்று. உண்மையில் இடதுசாரி வலது சாரிப் போட்டிக்குப் பதிலாக குடும்பப் போட்டியே நிலை பெற்றது இதனால் பண்டாரநாயக்கா தனது நடுவழியின் மூலம் இடது சாரிகளைத் தோற்கடித்து விட்டார். இங்குள்ள சுவாரசியமான ஆனால் துயரம் என்னவெனில் இடது சாரிகளின் நேச சக்தியாகக் காணப்பட்ட பண்டாரநாயக்க இடது சாரிகளைத் விழுங்கிக் கொண்டமையும் தன்னை ஓர் இனவாதியாக்கிக் கொண்டமையும் தான். 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் வெற்றி என்பது அவரின் இடதுசாரி பொய்த்தோற்றத்துக்கும் இனவாதத்துக்கும் கிடைத்த வெற்றிதான் ஆட்சி அதிகாரத்துக்கு வரக்கூடிய ஒருவர் இடதுசாரிகளை தோற்கடிக்கக்கூடியவராக வந்தது என்பது தமிழரின் அனுசரணை தேவையற்றது என்ற நிலையை உருவாக்கியது.

(7ஆம் பக்கம் பார்க்க)

## தேவாரம் பாடும்

வில் அதாவது பார்வதிக்கிழவியின் மகளின் வளவின் பின்புறத்தில் மண்ணைக் கொத்திப் பாத்தி கட்டிக் கொண்டிருந்தார் சின்னப்பர்.

சிறு தோட்டம் செய்ய வேணுமெண்ட ஆசை அவருக்கு.

பார்வதிக் கிழவி தினமும் அந்த வழியால் போய் வருகின்றாள். வீட்டை எட்டிப் பார்க்க அவளுக்கு மனம் கூசுகின்றது.

(யாவும் கற்பனை)


பாடம்:- **விலங்கியல்**

அலகுகள்:- 1) தொகுதிகள் (93)
2) பொருளாதார விலங்கியல் (92)

ஆசிரியர்:- திரு. நாகநாதன்

திகதி:- 5-4-92

நேரம்:- 1) 1. 30 - 2. 30 (93)
2) 5. 30 - 6. 30 (92)

இடம்:- **யூனிவேர்சல்**
கந்தர்மடம் (சி/4206)

பாடம்: **தாவரவியல்**

அலகு: தாவர உடற்றொழிலியல்

ஆசிரியர்: திரு. ஐங்கரநேசன்

திகதி:- 5- 4- 92

நேரம்:- பி, ப. 5. 30 - 6. 30

இடம்:- **யூனிவேர்சல்**
கந்தர்மடம் (சி/4207)

பாடம்: **பௌதிகவியல்**

அலகு: ஒளியியல்

ஆசிரியர்: திரு. வர்ணம்

திகதி: 05 - 04 - 92

நேரம்: நண்பகல் 12.00 --- 1.00

இடம்: **யூனிவேர்சல்**
கந்தர்மடம் (சி/4205)

தொழில்நுட்பக் கல்லூரி
**இறுதிப்பரீட்சைகள் 1989/1990/1991**
தமிழ், ஆங்கில, சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பரீட்சை (N. C. B. S) உட்பட

மேற்படி பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் யாழ்ப்பாணம், தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறும்.

1992-4-07 தமிழ் சுருக்கெழுத்து உயர் / N.C.B.S
1992-4-08 தமிழ் தட்டெழுத்து உயர் / N.C.B.S
1992-4-10 ஆங்கில சுருக்கெழுத்து கீழ்/உயர் தரங்கள்
1992-4-11 ஆங்கில தட்டெழுத்து உயர்தரம்

மேற்குறிப்பிட்ட பரீட்சைகளுக்குரிய பரீட்சார்த்திகள் அவ்வத் திகதிகளில் காலை 9.00 மணிக்கு முன் சமுகமளிக்கவும்

அதிபர்
தொழில் நுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(சி/4210)




பாடசாலை மாணவர்களின் சீருடைகளை, அலுவலகங்களில் வேலை செய்வோர்களின் ஆடைகளை துரிதமாகவும் தூய வெண்மையாகவும் சலவை செய்வது

**'மில்க்வைற் சலவைத் தூள்'**

இதன் சக்தி மிக்க நுரைவளம் அழுக்கை வெளியேற்றுவதில் திறமையாகச் செயற்படுகிறது.
50 கிறாம் பக்கற் ரூபா 5-00
ஒரு டசின் விலை ரூபா 54-00
வெற்றுப் பக்கற்றுக்களைச் சேகரித்து எம்மிடம் சேர்ப்பித்து அன்பளிப்புகளைப் பெறுங்கள்

**- மில்க்வைற், யாழ்ப்பாணம்**
(சி-4209)

உ
அருள்மிகு
சாவகச்சேரிபன்றிக்கேணிகந்தசுவாமிகோயில்
**கந்தபுராண கலாசார விழாவும் சிவபூசை விழாவும்**

காலம்: 03 - 04 - 1992 வெள்ளிக்கிழமை காலை 8 . 30 மணி

ஆசியுரை:
நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரியஸ்வாமிகள்
பிரதம குரு
சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் பல சிவாச்சாரியர்கள் கலந்து கொண்டு நடாத்திவைப்பார்கள்.
அதனைத் தொடர்ந்து
ஸ்ரீ கருட புராண வசனம் நூல்வெளியீட்டு வைபவமும் நடைபெறும்.

பரிபாலனசபை சார்பில்
(2409) பண்டிதர் க. சங்கரப்பிள்ளை.

**ஸ்ரீதர் திரையரங்கில்**
தினசரி மாலை 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது

**Eagles Over London**
( லண்டன் மேலாக கழுகுகள் )
(4203)

# குழம்பிய நிலையில் பிரேமதாசா அரசாங்கம்; இனப்பிரச்சினை தீர்வில் அணுகுமுறை தோல்வி

தமிழர் தேசிய இனப் பிரச்சினையில், சிறிலங்கா அரசாங்கத்தின் அணுகுமுறை ஓர் மந்த நிலையை அடைந்துள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் வடபகுதிக்கான விஜயம் தடைப்பட்டமையும், 'வன்னிவிக்கிரம(iii) 'ஒப்பரேசன் சிக்சர்' ஆகிய நடவடிக்கைகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டாததோடு ஏற்பட்ட பின்னடைவும், அதேவேளை இவ் விவகாரங்களில் விடுதலைப் புலிகளின் திறம்பட இராஜதந்திர அணுகுமுறையையும், புதியராணுவத்தந்திரோபாயத்தையும் கையாண்டமையும் சிறிலங்கா அரசாங்கத்தின் அணுகுமுறை மந்தநிலை குழப்பமடைந்தமைக்கும் காரணம் எனலாம்.

பிரேமதாசா அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்விற்கு 'இருவழி அணுகுமுறை' ஒன்றையே கடைப்பிடித்து வந்தது. இதன் பிரகாரம் இராணுவ ரீதியாக புலிகளுக்குப் பெரும் அழுத்தத்தைக் கொடுக்கும் அதேவேளை, மறுபுறத்தில் பேச்சுவார்த்தைகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாப்போலும் காட்டிக் கொண்டது 'சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா புத்திசாலித்தனமானதென எண்ணிக் கொண்டு அபாயகரமான ஆட்டம் ஒன்றை ஆடுகிறார். ஒரு புறத்தே இராணுவத்தினரை ஊக்குவிக்கும் அதேவேளை மறுபுறத்தே சமாதானப் பேச்சுக்களையும் ஊக்குவிக்கின்றார்' என 'இந்தியா ருடே' செய்தியாளர் சேகர் குப்தா கடந்த நவம்பரில் குறிப்பிட்டார். திரு. பிரேமதாசாவின் இவ் அணுகுமுறை இன்று பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளமையால், இனப் பிரச்சினை தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அரசாங்க மட்டத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

## இராணுவத் தீர்வில் நம்பிக்கை

கடந்த வருட மத்தியிலும், அதைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியிலும், இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றைக் கண்டுவிடலாம் என சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் வெகுவாக நம்பின. இதனை அரசியல்வாதிகளும் ஏற்றுக் கொண்டனர். ஆனையிறவுப் போரிலும் மணலாற்றுப் போரிலும் (1991 செப்டம்பர்) விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட கணிசமான உயிரிழப்பும், பெருமளவிலான வெடிப் பொருட்களின் செலவும் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றி கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை சிறிலங்கா தரப்பினருக்கு ஏற்படுத்தியிருந்தது. விடுதலைப் புலிகள் மீது இந்திய அரசு எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கையும், அதன் மூலம் விடுதலைப் புலிகளின் விநியோகப்பாதை துண்டிக்கப்பட்டுள்ளமையும் தமக்கு அனுகூலமானவை எனவும் சிறிலங்கா தரப்புக் கருதியது.

சிறிலங்காவின் கருத்துக்களுக்கு இசைவாய்ப்போல், அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைகளில் இராணுவத்தினருக்கு கிடைத்த அனுபவங்களும் இருந்தன. 'ஒப்பரேசன் வலம்புரியின்' போது தீவகத்திலும், பூநகரிப்பகுதியிலும் விடுதலைப்புலிகள் பெரியளவில் நேரடியாக எதிர்த்துப் போரிடாமலும் வங்காளவிரிகுடாவில் விடுதலைப் புலிகளின் கப்பல் இந்தியக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டமையும் சிறிலங்கா இராணுவத்தினருக்குத் தெம்பையும், நம்பிக்கையையும் கொடுத்தன.

## பெரும் இராணுவ தளபாடக் கொள்வனவு

இதேவேளை ஆனையிறவு மணலாறு போர்களின் பின் இராணுவத்தீர்வில் சிறிலங்காவிற்கு ஏற்பட்ட தீவிர நம்பிக்கையும் வடபகுதி யுத்தங்களில் ஏற்பட்ட அனுபவமும் பெரும் இராணுவத் தளபாடக் கொள்வனவிற்கு சிறிலங்கா அரசாங்கத்தைத்தூண்டியது. அப்பொழுது சர்வதேச சூழலில் இருந்த சூழ்நிலையும் தற்பொழுது உள்ளது- ஆயுதக் கொள்வனவிற்கு வாய்ப்பாக இருந்தது. கிழக்கு ஐரோப்பில் கடந்த வருட இறுதியில் நிலவிய அரசியல் ஸ்திரமின்மையும் பொருளாதார நெருக்கடியும் சீனாவில்மலிவு விலையில் கிடைக்கக்கூடியதாக இருந்த கடற்படை விமானப்படைத் தளபாடங்களும் மிகவிரைவில் சிறிலங்காவினால் கொள்வனவு செய்யப்பட்டன.

அதாவது இராணுவத் தீர்வில் ஏற்பட்ட நம்பிக்கையானது என்றுமில்லாதவாறு பெரும்படைப் பெருக்கத்திற்கும் ஆயுதக் கொள்வனவிற்கும் வழி வகுத்தது. அத்தோடு 1992 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திலும் என்றுமில்லாதவாறு 1500 கோடி ரூபாவிற்குமேல் பாதுகாப்புக்கெனவும் ஒதுக்கப்பட்டது. இராணுவம் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்கில் பெரும் தாக்குதல் திட்டம் ஒன்றை வகுத்து தாக்குதலுக்கும் தயாரானது. கடந்த வருட இறுதியிலும் இவ்வருட ஆரம்பத்திலும் முதல் இரண்டு மாத காலத்திலும் யாழ்.குடா நாட்டின் மீது எந் நேரமும் தாக்குதல் தொடுக்கப்படலாம் என ஓர் பதற்ற நிலை உருவாகியிருந்தது.

> இனப்பிரச்சினை தீர்வுகுறித்து பிரேமதாசா அரசாங்கம் கையாண்ட 'இருவழி அணுகுமுறை' இன்று பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. புலிகளின் புதிய யுத்த தந்திரோபாயம் இராணுவத்தினரின் திட்டங்களை குழப்பியடித்துள்ள அதேவேளை. பௌத்த பேரினவாத சக்திகளின் எதிர்ப்பிற்கு பணிந்து, பேச்சுவார்த்தைக்கான வழிமுறைகளை அரசாங்கம் மூடியதினால் இந்த நெருக்கடி நிலை உருவாகியுள்ளது

## சமாதான முயற்சிகள்

இவ்வாறாக இராணுவத் தயாரிப்புகள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்கையில் மறுபுறம் சமாதான பேச்சுவார்த்தையூடாக அரசியல்தீர்வு ஒன்றைக்காண்பதற்கான முயற்சிக்கும் அரசாங்கம் மறைமுகமாக பச்சைக் கொடி காட்டியது. இதனைத் தொடர்ந்து பல சமாதான நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் புலிகளுடன் சமாதான பேச்சுவார்த்தைகளை நடத்த வடக்கே வந்தன. 'குவேக்கர்ஸ்' சமாதானக் குழுவினர் கிறிஸ்தவ திருச்சபைகளைச் சேர்ந்த குருமார்கள், தலைவர்கள், ஆயர்கள் போன்றவர்கள் இதில் இடம் பெற்றனர்.

இந்நிலையில் அமைச்சர் தொண்டமானும் ஒரு சமரச முயற்சியில் ஈடுபட்டார். வடக்கு-கிழக்கு இணைந்த ஓர் தீர்வுத் திட்டத்தை முன்வைத்த அமைச்சர் தொண்டமான் தனது தீர்வுத் திட்டத்தை சிறிலங்கா ஜனாதிபதி உட்பட எதிர்கட்சித் தலைவர் சகலருடனும் பேச்சு நடத்தினார். இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக திரு தொண்டமன் அறிவித்தார். இதைத் தொடர்ந்து பலமான எதிர்ப்பு பௌத்த பேரினவாத சக்திகளிடம் இருந்துஎழுந்தது. இதனைத் தொடர்ந்து அமைச்சர் தொண்டமானின் சமரசத்தீர்வுத்திட்டத்திற்கு மறைமுகமாக அங்கீகாரம் வழங்கியிருந்த ஜனாதிபதி பிரேமதாச நைசாக நழுவிக் கொண்டார்.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின்சிபாரிசுகளையே அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாக அறிவித்தது ஆனால் ஆளும். ஐக்கிய தேசியகட்சியோ அன்றி பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சியோ இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தையும் முன்வைக்கவில்லை.

இந் நிலையில், பாராளுமன்றத் தெரிவுக் குழு வடக்கே வந்து புலிகளையும், மக்களையும் சந்தித்து தமிழ் மக்களின் அபிலாசைகளையும் அறிந்து கொள்ளுதல், இனப்பிரச்சினையின் தீர்விற்கு முக்கியமாக இருந்தது. ஆனால் வடக்கே சென்று புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து பௌத்த பேரினவாத சக்திகளிடம் இருந்து எழும் கண்டனத்தைத் தவிர்ப்பதற்காக விடுதலைப்புலிகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை புலிகள் எழுத்துமூலம் உத்தியோகபூர்வமாக அழைக்க வேண்டும் என பாராளுமன்றத் தெரிவுக் குழு கோரியது

இவ்வாறாக ஒருபுறம் இராணுவ அழுத்தத்தைப்பிரயோகிக்கும் தந்திரோபாயத்தையும், ஒருபுறத்தில் சமாதான முயற்சிகளை மேற்கொள்வது போன்ற இராஜ தந்திரத்தையும் அரசாங்கம் கடைப்பிடிக்க முற்பட்ட அதேவேளை விடுதலைப்புலிகளும் தமது இராணுவ அரசியல் அணுகுமுறையில் குறிப்பிடக் கூடிய மாற்றத்தை ஏற்படுத்தினர்.

## புலிகளின் புதிய இராணுவ அரசியல் தந்திரோபாயம்

இராணுவத் தயாரிப்பிலும் யாழ். குடா நாட்டின் மீதான பாரிய தாக்குதலுக்கும் சிறிலங்கா இராணுவம் பெரும் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்த வேளையில் விடுதலைப் புலிகள் தமது யுத்ததந்திரோபாயத்தின் விரைவான அதே வேளை இராணுவத்திற்குப் பேரிழப்பை ஏற்படுத்தக்கூடிய ஓர் யுத்த தந்திரோபாயத்தை விரைந்தேயாளத் தொடங்கினர். வடக்கு - கிழக்கு எங்கும் விரைவான அதிரடித் தாக்குதல் பரவலாக மேற்கொள்ளப்பட்டன. அதிரடித் தாக்குதல்கள் தனியாக ரோந்துப்பிரிவுகள் மீது மட்டுமல்ல, இராணுவ காவலரண்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டன. இதே வேளை சில பிரதேசங்களில் இராணுவப் படை எடுப்பின் போது எதிர் கொள்வதைத் தவிர்த்தனர். சில இடங்களில் இராணுவத்தினரை திடீரென எதிர் கொண்டுசிதறடித்தனர்.

இதனால் இராணுவத்தினருக்குப் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தின. பெருமளவு இராணுவத் தளபாடங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முல்லைத்தீவில் புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவித்த பி. பி. சி, வடக்கே அகலக் கால் வைத்தால் என்ன நடக்கும் என்பதற்கு இது சிறந்த உதாரணம் எனத் தெரிவித்த காலாட்படையின் முன்னணிப் படையினர் கிலிகொண்டனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதான தாக்குதலுக்கு முன்னோடியாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் புலிகளின புதிய தந்திரோபாயத்தால் குழப்பமடைந்தது புலிகளின் யுத்த தந்திரோபாயம் எவ்வாறு இருக்கும் என்றும் அவர்களின் பலம் என்ன என்பது குறித்தும் இராணுவ வட்டாரங்களில் குழப்பம் ஏற்பட்டது. இராணுவ நடவடிக்கையை திட்டமிட்டவாறு மேற்கொள்ள முடியாத நிலை உருவானது. அதாவது சிறிலங்கா இராணுவத்தின் போர்யுக்தி தோல்வி கண்டது.

இதேபோன்று அரசியல் அணுகுமுறையிலும், குறிப்பிடக்கூடிய ஆனால் கடந்த ஆண்டில் ஆரம்பித்துக் கொண்டிருந்த நிலைப்பாட்டை மேலும் தெளிவாக புலிகள் வரையறை செய்தனர். இதன் பிரகாரம் தெற்கில் இருந்து வரும் நல்லெண்ணத் தூதுக் குழுக்களுடன் சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதிலும் சமாதான தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதில் விடுதலைப்புலிகள் ஆவலாக இருப்பதையும் வெளிகாட்டினர். அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைக்கான கதவுகளை விடுதலைப் புலிகள்அகலவே திறந்து விட்டிருந்தனர்.

புலிகளின் இந்த அரசியல் அணுகுமுறை சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து மேலும் நெருக்கடிகளைத் தோற்றுவித்தது. அமைச்சர் தொண்டமான் வடக்கே வர அனுமதி கோரியபோது விடுதலைப்புலிகள் அனுமதி வழங்கினர். அமைச்சர் தொண்டமான் வடக்கே வந்து தமிழ் மக்களின் அபிலாசைகளை அறிந்து கொள்வதோடு விடுதலை புலிகளின் நிலைப்பாட்டையும் அறிந்து கொள்ளலாம் என புலிகள் தெரிவித்தனர். ஆனால் தொண்டமான் வருகை பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளால் குழப்பப்பட்டபோது பிரேமதாசா அரசு அவற்றை எதிர்க்காது பணிந்து போனார்.

இதேபோன்றே பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்கே புறப்பட முயற்சித்த போது விடுதலைப்புலிகள் எழுத்து மூலம் உத்தியோகபூர்வ அழைப்பு விடப்படவேண்டும் எனக் கோரப்பட்டது ஆனால் விடுதலைப் புலிகள் மிகவும் முதிர்ந்த இராஜதந்திரத்தோடு நடந்து கொண்டனர். தமிழரின் இனப் பிரச்சினை தொடர்பாக நல்லெண்ணத்தூதுக்குழுக்களாக எவரும் வரலாம் தமிழர்களின் அபிலாசைகளை அறிந்து கொள்ளலாம். விரும்பின் புலிகளுடன் சந்தித்தும் பேசலாம் ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை உத்தியோக பூர்வமாக சந்திக்கும் அவசியம் தமக்கு இல்லை எனவும் தெரிவித்து விட்டனர். இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சரியானதென பல அரசியல் விமர்சகர்கள் ஏற்றுக் கொண்டனர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இந் நிலைப்பாட்டினால் அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கை நோக்கி அரசாங்கம் முன் செல்ல முடியாத நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது

அதாவது இராணுவ அழுத்தத்தின் மூலமும் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை இட்டுச்செல்லும் சிறிலங்காவின் இனப்பிரச்சினைத் தீர்விற்கான அணுகுமுறையைப் புலிகளின் புதிய யுத்ததந்திரோபாயம் முறியடித்த வேளையில், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் அரசியல் தீர்வு காண்பதென்ற அரசாங்கத்தின் முடிவு பௌத்த பேரினவாதத்திற்குப் பணிந்து போகும் அரசாங்கத்தின் நடவடிக்கையால் கேள்விக்குள்ளாகி உள்ளது இதனால்இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்தின் அணுகுமுறை பெரும் குழப்பத்தில் உள்ளது.

**- ஜெயராஜ் -**

---

## இடது சாரிகளுக்கு

ஐம்பதுகளின் மத்தியில் இடது சாரிகள் தோற்கடிக்கப் பட்டதுடன் படிப்படியாக இடது சாரிகள் பிற்போக்கான இனவாத பாதையை எடுக்கலாயினர். ஆனால் வரலாற்றில் ஒரு அணிப்பீட்டு சக்தியாக எடுக்கும் போது இடது சாரிகள் ஐம்பதுகளின் மத்திவரை ஒரு சக்தியாக இருந்ததென்பது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தமிழர்களுக்கு ஒரு சாதக அம்சமாக இருந்தது

இடது சாரிகளை தோற்கடிக்க ஐ. தே. கட்சியினர் முதலில் தமிழர்களின் உதவியை நாடினர் ஆனால் பண்டாரநாயக்காவே ஐதே.கவை தோற்கடிப்பதற்காக தனக்கு இடது சாரி முலாம் பூசினார். இதனால் ஒரே வேளையில் அவர் ஐ தே க.வையும் இடது சாரிகளையும் தமிழர்களையும் தோற்கடிக்க முடிந்தது. இவ்வாறு இடதுசாரிகள் தோற்கடிக்கப்பட்டதும் தொடர்ந்து தமிழர்களை எதிர்க்கும் அரசியல் என்பது சாத்தியமானது

---

## தொண்டர்

நடாத்த இருப்பதாக தெரிய வருகிறது.

யாழ் மாவட்டம் உட்பட வட பகுதியில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனங்கள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை ஒன்றை இத் தூதுக்குழு வினர் நடாத்த விருக்கின்றனர்.

இத் தூதுக் குழுவில் யாழ். கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் மற்றும் தமிழர் ஆசிரியர் சங்கம் தொண்டர் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் அடங்கியிருப்பர் என்றும் தெரியவருகிறது.

இத் தூதுக் குழுவினரின் கொழும்பு விஜயத்தின் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட இருக்கிறது. தூதுக்குழுவினரின் கொழும்பு விஜயத்திற்கான ஏற்பாடுகளையும அதிகாரிகளுடனான சந்திப்பிற்கான ஏற்பாடுகளையும் ஒழுங்கு செய்வதற்கு யாழ் கல்விப்பணிப்பாளர் நேற்று மாலை சம்மதம் தெரிவித்துள்ளார். (க)

---

## ஈ.பி.ஆர்.எல்.எப்: கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய கத்தோலிக்க தூதுக்குழுவினர் வெளியிட்ட அறிக்கைக்கு ஈ. பி. ஆர். எல். எப்பினர் கடுமையான எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# சோலங்கியின் குறிப்பைபுறக்கணிக்க சுவிஸ்அரசிடம் இந்தியா கோரிக்கை

(டில்லி)

மாதவ்சிங்சோலங்கியின் கடிதக் குறிப்பை அரசின் உத்தியோக பூர்வமான குறிப்பாகக் கருதவேண்டாம் என்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் சுவிற்சலாந்து அரசுக்கு அறிவித்துள்ளார்

சோலங்கி சுவிற்சலாந்துக்கு வழங்கிய கடிதம் தொடர்பாக நேற்றுப் பாராளுமன்றம் விவாதித்து இரண்டு மணி நேரத்தின் பின் இந்தச் செய்தி சுவிஸ் அரசுக்கு அறிவிக்கப்பட்டது

இதேவேளை இந்தியா 1986 ஆம் ஆண்டு சுவீடன் நாட்டுடன்செய்த போபர்ஸ் பீரங்கிப் பேரத்தில் சுமார் 150 கோடி ரூபா லஞ்சம் பெற்ற அரசியல் வாதிகள் யாரி என்பதை கண்டறிய தமது அரசு முயற்சிக்கும் என பிரதமர் பீ.வீ. நரசிம்மராவ் கூறியிருக்கிறார்.

இதற்காக சுவிற்சலாந்தில் நடைபெறும் வழக்கில் சுவிஸ் அதிகாரிகள் தேவையான நடவடிக்கை எடுக்கத் தான் அவர்களை அவசரமாக கேட்டுக் கொண்டிருப்பதாக நரசிம்மராவ் குறிப்பிட்டார்.

நிலைமையைசீராக்க எல்லா நடவடிக்கையும் எடுக்கப் படுமென கூறியஅவர் தொடர்ந்து இவ் வழக்கில் தாம் நேரடிக் கவனம் செலுத்த இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதனிடையே இவ் வழக்கு விவகாரம் தொடர்பாக இந்தியாவுடன் ஒத்துழைக்குமாறு சுவிற்சலாந்து நீதிமன்றமொன்றை அந் நாட்டரசு கோரியுள்ளது.

## மேலும் ஒரு கடிதம் சோலங்கி கொடுத்தாராம்

[டில்லி]

முன்னாள் வெளியுற அமைச்சர் மாதவசிங் சோலங்கி போர்பஸ் பீரங்கிப் பேரம் தொடர்பாக கொடுத்த குறிப்பைத் தவிர மற்றொரு கடிதம் சுவிற்சலாந்துக்கு கொடுக்கப்பட்டதாக லோக்சபாவில் நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டினார்கள்.

கேள்வி நேரத்துக்குப் பிறகு இந்தப் பிரச்சினையை எழுப்பிய ஜனதாதள்ளின் ஜோர்க் பெர்னாண்டஸ் இந்த விசாரணையைத் தடுப்பதில் ஒரு நிறுவனம் ஈடுபட்டிருக்கிறது என்று பத்திரிகையில் செய்தி வெளிவந்ததாகக் கூறி இந்த நிறுவனத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டார்.

## லிபியா மீதான நடவடிக்கை இந்தியா கண்டனம்

லிபியாவுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை தடை விதித்தது பாரபட்சமானது என்று இந்தியா தெரிவித்துள்ளது இந்தத் தடை விதிப்பு வாக்களிப்பில் இந்தியா கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வன்முறைக்கு லிபியா துணை போவதாகக் கூறும் மேற்கத்தியநாடுகள் காஷ்மீர், பஞ்சாப் வன்முறைக்குத் துணை போகின்ற பாகிஸ்தானுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்தது என்று இந்தியா கேட்டுள்ளது.



## இன்றையபோட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வலிகாமம் மேற்குப் பிரிவுக்கான இன்றையபோட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா அணியை எதிர்த்து காந்திஜீ அணி மோதவுள்ளது. இப் போட்டி இன்று பி.ப. 3 00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## பரீட்சைமுடிவுகள்

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற க.பொ.த.(சா/த) பரீட்சையின் முடிவுகள் இன்று கொழும்பில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முத்தமிழ் விழா

## நிதி சேகரிப்பதற்கென கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு

(நமது நிருபர்)

எதிர்வரும் ஜூன் மாதமளவில் தமிழீழத்தின் பல பாகங்களிலும் கொண்டாடப்படவுள்ள முத்தமிழ் விழாவிற்கு நிதி சேகரிக்கும் பொருட்டு கலை நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடாத்துவதற்கு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் முடிவு செய்துள்ளது.

இதற்கமைய தென்மராட்சிப் பிரிவில் இடம் பெறவிருக்கும் கலைநிகழ்ச்சிகள் இன்றும் நாளையும், நாளை மறுதினமும் இடம் பெறவுள்ளன

முதலாவது நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை இரவு ஏழு மணியளவில் கைதடி நவில்ட் பாடசாலை மைதானத்திலும். நாளை (4 4.92) சனிக்கிழமை இரவு ஏழு மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி அரங்கிலும் நாளைமறுதினம்(5.4 92) ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழு மணியளவில் கொடிகாமம்திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளன.

இக்கலை நிகழ்ச்சியின் போது சாந்தன் குழுவினரின் போர்க்காலராகங்கள் இசை நிகழ்ச்சியும் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் தயாரிக்கப்பட்ட பொன். கணேசமூர்த்தியின் 'சந்தனக்காடு' நாடகமும் இடம் பெறவுள்ளன

சாவகச்சேரி மகளிர்கல்லூரி அரங்கில் இடம்பெறவிருக்கும் நிகழ்ச்சியில் தென்மராட்சி கலைபண்பாட்டுக்கழகம் தயாரித்து வழங்கும் 'நாளைமலரும் தமிழீழம்' எனும் நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளது.

### கிழக்கில்

திளம் வந்தாறுமூலையிலிருந்து முறக்கொட்டாஞ்சேனை நோக்கி ஜீப்பில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தினர். இத்தாக்குதலின் போது இராணுவ தரப்பில் பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது.

### திருமலை

க்கு உள்ளாகினர். இதனால் ஏற்பட்ட பலத்த இழப்பினால் இந்த அணிகள் பின்வாங்கி முகாமிற்கு ஓடிவிட்டன.

கும்பிறுப்பிட்டி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் புலிகளின் கடும் தாக்குதல்களினால் அங்கொடை என்னும் இடத்தில் தரித்து நிற்கின்றனர். இந்த இடத்திலும் இரண்டு அணியினரே நிற்கின்றனர்.

இராணுவத்தினர் பின் வாங்கிய பின்னர் வெருகல் பகுதியில் சிறீலங்கா குண்டு வீச்சு விமானங்கள் பலத்த குண்டு வீச்சு தாக்குதல்களை நடத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நடடிக்கை முடிவடைந்து விட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சர்வதேச

அதிகாரி நன்கு தமிழ் தெரிந்தவர் மேலும் இவர்கள் கைதிகளைப் பார்வையிட்டு அங்கு நடக்கும் அத்துமீறல் சம்பவங்களை தடுப்பதற்காகவும்அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை கவனிக்கவும் எனவும் தெரியவருகிறது.

மேலும் அண்மையில் பலாலி சென்று திரும்பிய அதிகாரியான மரிஜோ கைதிகள் மிகவும் கவலைக்கிடமாக இருந்தார்கள் என்றும் கூறினார் அதனாலேயே மாதத்தில் ஒரு தடவை செல்வதாக தீர்மானித்தார்கள் என்று பலாலி வீதியில் அமைத்துள்ள செஞ்சிலுவைச்சங்க ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (75)

### பல்கலை

லைக்கழக ஊழியர்களை ஏற்றிக் கொண்டு மட்டக்களப்பிலிருந்து வந்தாறுமூலைக்கு சென்றது என்றும்,

வான் ஏறாவூரை அண்மித்த சமயம் பொல்லுகள், தடிகள் சகிதம் வீதியில் நின்ற இந்தக் கோஷ்டி வானைத் தாக்கியது என்றும் இதனால் வான் கண்ணாடிகள் சேதமுற்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். கூட்டுறவாளரின்

## தியாகச்சுடர் அன்னைபூபதி நினைவு நிகழ்வுகள்

(நம்து நிருபர்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அன்னை பூபதியின் நாலாம் ஆண்டு அஞ்சலியை யாழ். மாவட்டத்தில் பத்து இடங்களில் நடாத்தவுள்ளது.

நாளை சனிக்கிழமை நடாத்தப்படவுள்ள நினைவு நாளும் அஞ்சலிக்கூட்டமும் வலிகாமத்தில் யாழ் கைலாசபிள்ளையார் கோவிலடி, மாத்தனை முருகன் கோவிலடி கொக்குவில், புத்தூர் சிவன்கோவில், சுன்னாகம் சதிரமலை சிவன் கோவில், வழக்கம்புரை அம்மன் கோவிலடியிலும் நடைபெறவுள்ளது.

தென்மராட்சியில் நுணாவில் அம்மன் கோவிலடி, மிருசுவில் அந்தோனியார் கோவிலடியிலும் நடைபெறும்.

வடமராட்சிப்பிரிவில் சரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடி, மந்திகை அம்மன்கோவிலடி, நாகதம்பிரான் கோவிலடி ஆகிய இடங்களிலும் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரையும் அடையாளஉண்ணாவிரதமும் அதனைத்தொடர்ந்து அஞ்சலிக் கூட்டமும், இறுதியாகக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

## பொருள்கள் கொண்டுவர பயணிகளுக்குத் தடை

(வவுனியா)

ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து தமிழ்ப்பயணிகள் வடபகுதி நோக்கிக் கொண்டுவரும் பொருள்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதிக்கப்படும் என்று பேயாடி கூழாங்குளம் சோதனை முகாம் இராணுவத்தால் தெரிவிக்கப்பட்டது.

பயணிகள் வியாபார நோக்கம் கருதி வவுனியா நகருக்கு வந்துசெல்வதை நாம் தடுக்கிறோம். வட பகுதிக்குக் கப்பல்களிலும், லொறிகளிலும், டிராக்டர்களிலும் பொருள்கள் தொகையாகக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது அப்பொருள்கள் அங்குள்ள மக்களுக்குப் போதும் என்று மேற்படி இராணுவத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாபார நோக்கில் அதிக தொகைப் பயணிகள் வரும் பட்சத்தில் எம்மால் அவர்களைக் கட்டுப்பாடாகச் சோதனை செய்ய முடியாமல் உள்ளது. ஆகவே தமது வீட்டிற்குரிய பொருள்களை மட்டும் கொண்டுசெல்வதற்கு அனுமதி வழங்கத் தீர்மானித்துள்ளோம் என்றும் கூறப்பட்டதாம். (நி)

### போக்கு வரத்து

காணப்படும் பிரதான வீதிகள் சிலவற்றைத் திருத்தி அமைத்தல், போக்குவரத்துக்களை இயன்றவரை திசை திருப்பி வாகன நெரிசலைத் தவிர்த்தல், வீதிஒழுங்குகளை நெறிப்படுத்தும் இலச்சினைகள் பொறிக்கப்பட்ட பலகைகளைப் பொருத்துதல் ஆகிய நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் பட்டிருக்கின்றன.

மேலும் வீதி ஒழுங்குகள் குறித்து கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள்குறித்து பாடசாலை மட்டத்தில் விளக்க உரைகள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட இருக்கின்றன இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாநகர ஆணையாளர் எடுத்துவினார். (க)

### க. பொ. த.

(சய) — 10400 மில்லியன் ரூபா எனத் தரப்பட்டுள்ளது. இது உண்மையில் (தேறிய) 10,400 மில்லியன் ரூபா என தரப்பட்டிருத்தல் வேண்டும். இத்தவறினைகல்வித் திணைக்களம் கருத்தில் கொள்ளவேண்டும் என பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கின்றனர். (ச)

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்

நிகழும் பிரசோற்பத்தி வருஷம் பங்குனி மாதம் 23 ஆம் நாள் (05-04-1992) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணி 12 நிமிட முதல் 3 மணி 30 நிமிட வரையுள்ள சுப முகூர்த்தத்தில்

எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**திருஞானசோதி**<br>(யாழ். மாவட்ட உலர் வலய அபிவிருத்தி மன்றம்)<br>அவர்கட்கும்

எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**குணேந்திரன்**<br>(சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்)<br>அவர்கட்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய திருவருள் பாலித்துள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வந்து ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

திரு. ந. அருளம்பலமும்,<br>பாரியாரும்<br>(இளைப்பாறிய அதிபர்)<br>நீர்வேலி வடக்கு,<br>நீர்வேலி.

திரு. சு. இராசரத்தினமும்,<br>பாரியாரும்<br>(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)<br>இணுவில் கிழக்கு,<br>இணுவில்.

(2351)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.